விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 10 | ஞாயிற்றுக்கிழமை (23.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 35

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310, 021 2227555, 021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# சர்வதேச உதவி மக்களை சென்றடைய நோர்வே பெரும் பங்காற்ற வேண்டும்!



## நோர்வே குழுவினிடம் தலைவர் பிரபா வலியுறுத்து

(கிளிநொச்சியிலிருந்து சதீபன்)

இன ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போரையும் மறந்து, இனப்பிரச்சினையையும் மறந்து சுனாமிப் பேரழிவுடன் மட்டும் நின்றுவிடாதீர்கள். தமிழ்மக்கள் இரண்டு சுனாமி அனர்த்தங்களினால் பேரழிவைச் சந்தித்திருக்கிறார்கள். ஒன்று ஆமியால் வந்த சுனாமி மற்றையது கடலினால் வந்த சுனாமி. இவ்விரு சுனாமிகளும் தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அழிவுகளிலிருந்து எமது மக்கள் மீள்வதற்கு சர்வதேச உதவிகள் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைய வேண்டும். அரசின்மீது எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, பாதிக்[illegible]ட மக்களுக்கான சர்வதேச உதவிகள் சென்றடைவதற்கு நோர்வே தரப்பினர் பெரும் பங்காற்ற வேண்டும்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுடன் நோர்வேக் குழு பேச்சு

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்று சந்தித்து கலந்துரையாடினர். இக் கலந்துரையாடல் நேற்று பிற்பகல் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (14 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே எம்.பிக்கள் குழு கூட்டமைப்புடன் இன்று பேச்சு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக இலங்கை வந்துள்ள 10 பேர்கொண்ட நோர்வே எம்.பிக்கள் குழு இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை சந்தித்துப் பேசவுள்ளனர்.

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சந்திப்பு நடைபெறும் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனின் தலைமையிலான கூட்டமைப்பு எம்.பிக்கள் இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் நோர்வே எம்.பிக்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## நிவாரண நடவடிக்கைகளுக்கு பொதுவான ஒரு கட்டமைப்பு

### நோர்வே விரும்புவதாக பாலசிங்கம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பொதுவான ஒரு உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரத் தாங்கள் விரும்புவதாக நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அரச கட்டமைப்பு மூலம் இல்லாமல் பொதுநிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் நிவாரண நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் திட்டங்களை கொண்டுவந்து அத் திட்டங்களை சர்வதேச சமூகத்திற்கு வழங்கவேண்டும். அதன்மூலம் சர்வதேச உதவிகளை பகிர்வதில் உள்ள சிக்கல்கள் நீங்க வாய்ப்புண்டு.

சுனாமி நிவாரணம் தொடர்பான பொதுவான தமது திட்டத்தை ஏற்கனவே அரசினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதான செயலகங்கள் மேற்கொண்டுள்ளன. ஆனால், அது தொடர்பான பேச்சுக்கள் ஒரு முடிபுக்கு கொண்டுவரப்படவில்லை. சமாதான முயற்சிகள் பற்றி நேற்றைய பேச்சுக்களில் எதுவும் ஆராயப்படவில்லை.

உரிமைப் பிரச்சினை வேறு - சுனாமிப் பிரச்சினை வேறு, சுனாமிப் பிரச்சினையை இரு தரப்பும் சுமுகமாக தீர்த்தால் அது இனப்பிரச்சினைத் தீர்விற்கு வழிகோலும் என நோர்வேத் தரப்பினர் எதிர்பார்ப்பதாகவும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். (ச)

## நோர்வே குழுவின் பயணம் திட்டமிட்டு இழுத்தடிப்பு?


சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடச் சென்ற நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரின் பயணத்தை அரசு திட்டமிட்ட முறையில் இழுத்தடித்து வந்ததாகவும் காலநிலையினையும், போக்குவரத்தையும் காரணம் காட்டி நோர்வேத் தரப்பினரை வன்னிப் பகுதிக்கு நேற்று நண்பகல்வரை செல்லவிடாமல் தடுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

வழமையாக காலை 11 மணிக்கு நோர்வேத் தரப்பினர் வன்னிக்கு வருகை தருவதாக இருந்தபோதும் இவர்கள் பிற்பகல் 12.35 வரைக்கும் வன்னிக்கு வரவில்லை. முல்லைத்தீவு மற்றும் செம்பியன்பற்றுப் போன்ற தமிழீழக் கரையோரப் பகுதிகளுக்கான நோர்வே (14 ஆம் பக்கம் பார்க்க)




## நோர்வேக் குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்தபோது....





## பத்திரிகையாளர் மாநாட்டின்போது...





படங்கள்: க.சதீபன்

# திருமலையில் தொடர்ந்தும் அடைமழை முகாம்களிலுள்ள மக்கள் பெரும் அவலம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையின் விளைவாக நலன்புரி முகாம்களிலும், தற்காலிக கூடாரங்களிலும் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் அங்குள்ள குடும்பங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

இதற்கான மாற்ற ஏற்பாடுகளைச் செய்துதருமாறு அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த இந்தக் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இத்தகையநிலை தொடருமானால் தாங்கள் கடும்குளிரினாலும், தொற்றுநோய்களினாலும் பாதிக்கப்படும்நிலை உருவாகும் எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய குடும்பங்கள், அங்குள்ள நாற்பதிற்கும் மேற்பட்ட பாடசாலைக் கட்டடங்களில் தங்கியிருந்தனர். இந்தப் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டிய நிலையில் இவர்கள் படிப்படியாக தற்காலிகக் கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டு வருகின்றனர்.

இத்தகைய நிலையில் மனிதாபிமான அடிப்படையிலாவது அரச பொதுக் கட்டங்களிலோ அல்லது ஏனைய கட்டடங்களிலோ தங்களைப் பாதுகாப்பாக தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

(ற-4)

# ஜேர்மன் மருத்துவக்குழு திருமலைக்குச் சென்றது

(திருகோணமலை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ உதவிகளை வழங்கும் வகையில் ஜேர்மன் மருத்துவக்குழுவினர் நேற்று முன்தினம் திருகோணமலைக்குச் சென்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் திருகோணமலை மாவட்டத்தில் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவசேவையினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மருத்துநிபுணர்கள் சுனாமியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட கோயில்புரம் அகதி முகாம்களுக்குச் சென்று மருத்துவ சிகிச்சையினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-4)

## சங்கமம் ஒளிப்பேழை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கலைக்காவிரி மனறத்தின் சங்கமம் ஒளிப்பேழை வெளீயிட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

மன்றத்தலைவர் கிருசோத்தமா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஒளிப்பேழையை வெளியிட்டு வைப்பார்.

இந்நிகழ்வில் வெளியீட்டு உரையினை ஆசிரியர் ந.விஜய சுந்தரமும் மதிப்பீட்டு உரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவும் பதிலீட்டு உரையினை மன்ற இயக்குநர் வலன்ரீனா இளங்கோவனும் நிகழ்த்துவர்.

(ந)


கண்ணீர்ப் பூக்களால் பிரார்த்தனை



இணுவில் ஆத்மீக மைந்தன்

கார்த்திகேசு கேசவன்

அமரர் கார்த்திகேசு கேசவன் இறைவனடி சேர்ந்த தைமிட்டு அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல்கூறுவதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய அவர் ஆத்மீக நண்பர்கள் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இணுவை முருக அடியார்களும், ஆத்மீக நண்பர்களும், இணுவில்

(9192)


(1ம் பக்கத் தொடர்ச்சி)

# சர்வதேச உதவிகள் மக்களை...

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நோர்வே சமாதான அனுசரணையாளர்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரை நோர்வே சமாதான அனுசரணையாளர்கள் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர் பிற்பகல் 1.50 மணி முதல் சுமார் இரு மணித்தியாலங்கள் வரை சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்புக் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது,

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தேசியத்தலைவர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் வெளிநாட்டு அரசியல் தலைவர்களையும் குறிப்பாக சமாதானத் தூதுவர்களாக நீண்டகாலமாகச் செயற்பட்டு வரும் நோர்வே உயர் மட்டக்குழுவினரை நேரில்சந்தித்து எமது மக்களின் நிலைபற்றியும், அரசியல் நிலைபற்றியும், சமாதானச் சூழ்நிலைபற்றியும் 2 மணி நேரமாக விபரமாக உரையாடினர்.

சுனாமி அனர்த்தத்தால் வந்த பாதிப்புக்களை மட்டும் அல்லாது ஏற்கனவே கடந்த 30 ஆண்டுகளாக எமது மக்கள் பாரிய அழிவுகளையும், உயிர்ச்சேதங்களையும், சந்தித்து வந்துள்ளார்கள். வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள எமது வளங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு விட்டன.

மாதகலில் இருந்து அம்பாறை வரையான பெருமளவு தமிழ்க் கிராமங்கள் உட்பட மீனவக்கிராமங்கள் தற்போதும் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

அந்தக்கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் மக்கள எவரும் வசிக்க முடியவில்லை.

ஏற்கனவே ஓர் பேரனர்த்தம் யுத்தத்தால் நிகழ்ந்துள்ளது. இதனை எமது தலைவர் ஆமியால் ஏற்பட்ட பெரும் சுனாமி எனவும், அதன் பின்புதான் இந்தப் பேரழிவு வந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இந்தப் பேரழிவு எமக்கு மிகப பெரியபாதிப்பு. அதாவது வடக்கு கிழக்கில் தான் இந்த பேரழிவு பெரியளவில் ஏற்பட்டுள்ளது. இங்குதான் பெருமளவிலான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆகவே இந்த சபையில் இரண்டையும் இணைதது்ப்பாருங்கள். யுத்தத்தையும் மறந்து இனப் பிரச்சினையையும் மறந்து சுனாமியோடு நிற்காது எமது மக்களின் நீண்ட வரலாற்றையும் பாருங்கள்.

கடந்த 50 ஆண்டுகால இன ஒடுக்குமுறை வரலாற்றில் எமது மக்கள் சந்தித்த பேரழிவு இது. சர்வதேச சமூகம் இப் போதுதான் அதாவது சுனாமி அனர்த்தத்தின் பின்னர் தான் எம்மை நோக்கி இந்தப் பக்கத்தில் கூடிய கவனத்தை திருப்பியுள்ளன.

ஆகவே இந்த நேரத்தில்தான நீங்கள் எமது மக்களின் ஒட்டு மொத்தமான முழுப்பரிமாணமான பிரச்சினைகளையும் பார்க்க வேண்டும். ஏனெனில் எமக்கு இந்த அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை.

காலம் காலமாக அரசாங்கங்கள் இப்படியான பேரழிவுகள் அனர்த்தங்களை தங்களது அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தியுள்ளன.

ஆகவே நீங்கள் இந்த முறையாவது செம்மையாக எந்தத் தடையுமின்றி இந்த உலகம் முழுதும் இருந்து வருகின்ற உதவிகளைப்பெற்று அவை சமத்துவமான முறையில் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு சென்று சேர உதவ வேண்டும் இவ்வாறு தலைவர் பிரபா கேட்டுக்கொண்டதாக பாலசிங்கம் கூறினார்.(ச)

# ஆசையால் வந்த வினை

(துன்னாலை)

மனிதனாகப் பிறந்தால் ஆசைகள் வரத்தான் செய்யும். ஆனால், ஆசைக்கும் அளவு இருக்க வேணடும் என்பார்கள்..

ஓர் இளைஞனுக்கு ஏற்பட்ட விபரீத ஆசையால் வந்த வினையைக் கேளுங்கள்!

தனககு விருப்பமான ஒருவரின் பெயரைக் கையில் குறிபதிக்க வேண்டுமென எண்ணிய இளைஞன் ஒருவா் சக நண்பனை நாடியபோது நண்பன் பட்டாசு வெடி மருந்தை வெடியிலிருந்து வேறாக்கி அம் மருந்துத்தூளை அவனது கையில் பெயராகத் தூவி எழுதிவிட்டு அதில் தீக்குச்சியைத் தட்டிப் பற்ற வைத்துள்ளார்.

இதனையடுத்து என்ன ஆனது தெரியுமா? கை முழுவதும தீப் பிடித்து எரிகாயம் ஏற்பட்டுவிட்டது.

இச்சம்பவம் துன்னாலை கலிகைச் சந்தியில் ஓரிரு தினங்களுக்கு முன்னா் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவா் தற்போது வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று வருகின்றார். (ப-101)

# பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களுக்கு இத்தாலி தொடர்ந்தும் உதவி வழங்கும்

## அந்நாட்டு பிரதிப் பிரதமர் உறுதிமொழி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட- கிழக்கு மக்களுக்கு மேலும் உதவிகளை இத்தாலிய அரசாங்கம் வழங்கும் என்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அந் நாட்டின் பிரதிப் பிரதமரும் வெளிநாட்டமைச்சருமான ஷியான் பிராங்கோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இத்தாலிய பிரதிப் பிரதமர் ஷியான் பிராங்கோ கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பில் அரசியல் பிரமுகர்களுக்கு விருந்துபசாரம் வழங்கினார்.

இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியிடம் கருத்து தெரிவிக்கும் போதே வட-கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உதவிகள் தொடரும் என்று இத்தாலியின் பிரதிப்பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்துப் பொருட்களை இத்தாலிய அரசாங்கம் விடுதலைப்புலிகளிடம் நேரடியாகக் கையளித்திருந்தது. இது பாராட்டத்தக்கது என்று கூறிய சம்பந்தன் எம்.பி, இத்தாலியப் பிரதிப்பிரதமரிடம் நன்றியும் தெரிவித்தார்.

இத்தாலியப் பிரதிப்பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் ஊக்கம் உடையவர்கள், இத்தாலியில் உள்ள தமிழ் மக்கள் நல்ல பண்புள்ளவர்கள். தமிழர்களுக்கான உதவிகளை இத்தாலிய அரசாங்கம் தொடர்ந்தும் வழங்கும் என்று கூறினார். (ற)

# உதவும் நாடுகளுடன் இலங்கை புரிந்துணர்வு உடன்படிக்கை

(கொழும்பு)

சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புதுப்பித்துத் தருவதாக உறுதியளித்துள்ள உதவும் நாடுகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சும், தேசிய நடவடிக்கைகளுக்கான நிலையமும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பாடசாலைகளின் புனர்நிர்மாண நடவடிக்கைகள் இந்த மாத பிற்பகுதியில ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புனர்நிர்மாண நடவடிக்கைகள் அனைத்தும் இந்த வருடம் யு,ன் மாதம் முடிவடைவதற்கு முன்னராகவும், பாடசாலைகளை வேறு இடத்தில் நிர்மாணிக்கும் பணிகள், அடுத்த வருடம் ஜனவரி மாதத்திற்கு முன்னதாகவும் பூர்த்தி செய்யப்படும் என அரசாங்கம் கூறுகிறது. (க-60)

# 58 சர்வதேச நாடுகளைச் சேர்ந்த உளவுப்பிரிவினர் இலங்கையில்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தையடுத்து இலங்கைக்குப் பல்வேறு நாடுகளும் உதவிப்படைகளையும், நிவாரண உதவிகளையும் வழங்கி வருகின்றன.

இலங்கையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் தினந்தோறும் சர்வதேச நாடுகளின் நிறுவனங்களும், இராஜதந்திரிகளும் சேத நிலைமைகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இதுவரையில் இலங்கைக்கு சுமார் 58 நாடுகளிடமிருந்து 256 விமானங்கள், கப்பல்கள் மூலம் 43,236 தொன் நிவாரணப் பொருட்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கவென 8, 272 தொன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய நிவாரணப் பொருட்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் களஞ்சியசாலையிலும் வேறிடங்களிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இதைவிட சர்வதேச தொண்டு நிறுவனங்களும், தனியார் ஸ்தாபனங்களும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளன.

எனினும் இவற்றுக்கப்பால் சர்வதேசப் படையினரின் உதவியென்று கூறிக்கொண்டு 4,000 சர்வதேசப்படையினர் வரை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் நிலைகொண்டுள்ளனர்.

சுமார் 15,000 ஆயிரம் சர்வதேச அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் சமூக சேவையில் ஈடுபடடு வருகிறார்கள். இவர்களில 58 நாடுகளின் இராணுவ மற்றும் உளவு நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது வேலைகளில் ஈடுபட்டு வருவதாகக் கணிபபீடுகள் தெரிவிக்கின்றன. (ற)

## குடை சாய்ந்தது

(துன்னாலை)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பேருந்து ஒன்று வல்லை வெளிப்பாலத்தில் குடை சாய்ந்தது.

நேற்று முன்தினம் முற்பகல 11.00 மணியளவில் 60 பயணிகளுடன் வந்த பேருந்து ஒன்றே இவ்வாறு குடை சாந்தது.

எனினும், இதன் போது பேருந்தில் பயணித்த பயணிகள் எவருக்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை. (ப-113,43)

# தைப் பூரணை தின விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கத்தின் தைப் பூரணை தின விழா நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ ராகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோண்டாவில் ஸ்ரீ ராகிருஷ்ண மகாவித்தியாலய அதிபா் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், சைவப்புலவா் இராசையா ஸ்ரீதரன் சிறப்பு ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து, சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் 'எழுந்திரு! விழித்துக்கொள்!' கண்காட்சியும் நடைபெறவுள்ளது. (ற)

# முதல் ஒரு நாள் போட்டி சிம்பாப்வே அணி வெற்றி

டாக்கா பங்கபந்து மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற கிரிக்கெற் போடடியில் சிம்பாப்வே அணி வங்கதேச அணியை 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பூவா, தலையா வென்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடியது. 14 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில ராஜர்ஸ் மற்றும் இப்ராகிம் விக்கெற்றுக்களைப் பறிகொடுத்தனர்.

அதன் பிறகு மட்சிக்கென்ஜேரி, மஸகட்ஸா ஆகியோர் இணைந்து 13 ஓவர்களில் 70 ஓட்டங்களைச் சேர்ந்தனர். மட்சிகன்ஜேரி 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

மசகட்சா 54 ஓட்டங்களையும், டெயிலர் 58 ஓட்டங்களையும் குவித்தனர். இறுதியில் சிகும்பரா 41 ஓட்டங்கள் எடுக்க 50 ஓவர்களில் 8 விக்கெற் இழப்பிற்கு சிம்பாப்வே 251 ஓட்டங்கள் எடுத்தது.

வங்கதேச தொடக்க ஆட்டக்காரர்கள் ராஜின்ஸலே மற்றும் ந.்.தீஸ் இக்பால் ஆகியோர் அதிரடி முறையில் ஆட்டத்தைத் தொடங்கினர். 6 ஓவர்களில் 34 ஓட்டங்கள் குவித்தனர். ந.்.பீஸ் இப்பால் மோசமான பந்து ஒன்றை மிக மோசமாக ஆடி 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.


ராஜின் சலேம் 45 பந்துகளில் 7 பவுண்டறிகளுடன் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன் பிறகு ஹபிபுல் பசார் (39), மொகமட் அஸ்ர.்.புல் (42) ஆகியோர் இன்னிங்சை நிதானமாகவும் அறிவுபூர்வமாகவும் ஆடுவதை விடுத்து அவசியம் அற்று ஆட்டமிழந்தனர்.

இதன்பிறகு சரிந்த வங்கதேச அணியினர் 41 ஆவது ஓவரில் 7 விக்கெற் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். (ற)



அவுஸ்திரேலியாவில் உள்ள "கோல்ட்கோஸ்டில் நீர்ச் சறுக்குப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் அவுஸ்திரேலிய வீரர் ஜெரார்ட் பெல் நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் காட்சியைத்தான் இங்கே காண்கிறீர்கள். இவர் இப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்தார்.

# விளையாட்டு செய்திகள்



மெல்பேர்னல் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் போட்டியின் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத் தில் அவுஸ்தி ரேலிய வீர் லெய்டன் ஹீவிட்டுடு, ஜேம்ஸ் பிளாக்கும் மோதினர். ஆட்டத்தின் போது, இரண்டாம் செட்டில் தான் பெற்ற வெற்றிப் புள்ளிகளுக்காக மகிழும் ஹீவிட்.

# பாகிஸ்தான் வீரர் மீது கற்பழிப்புக் குற்றச்சாட்டு

அவுஸதிரேலிய சுற்றுப்பயணத்தில் பாகிஸ்தான் கிரிக்கெற் வீரர் ஒருவர் மீது கற்பழிப்புக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மெல்பேர்னில் 'பாக்சிங்டே' அன்று நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது இந்தக் கற்பழிபுச் சம்பவம் நடந்ததாகப் பெண் ஒருவர் பாலியல் பலாத்கார எதிர்ப்பு மையத்தில் புகார் செய்துள்ளார்.

ஆனால், அந்தப் பெண் காவல் துறையினரிடம் புகார் எதுவும் செய்யவில்லை.

இத்தகவலைக் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெற் அணிப பயிற்சியாளர் பாப் உல்மர், தனது அணிவீரர் எவரும் இதனைச் செய்திருக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இக் குற்றச்சாட்டு மிகவும் தீவிரமாக அலசப்பட்டு வருவதால் தற்போதைக்கு மேலும் செய்வதற்கு எதுவும் இல்லையென்றார்.

மேலும் இது குறித்து சிட்னி கிரிக்கெற் மைதானத்தில் பயிற்சியின் போது தான் வீரர்களிடம் இது பற்றிப் பேசிய போது அனைவரும் அதிர்ச்சியடைந்தனர் என்றார் உல்மர். (ற)

# ஆஸி .ஓபன் 3வது சுற்றில் மகேஸ் பூபதி ஜோடி

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் ஆஸி.ஓபன் டெனிஸ் போட்டியில் இந்தியாவின் மகேஸ் பூபதி, அவுஸ்திரேலியாவின் டாட் உட்பிறிச் ஜோடி கால் இறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரட்டையருக்கான இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்திய, அவுஸ்திரேலிய ஜோடி 6 :4, 4:6, 6 :2 என்ற செற் கணக்கில் ரஷ்யாவின் இகார் ஆந்திரீவ், நிகோலேய் டேவி டென்கோ இணையைத் தோற்கடித்தது.

அடுத்து ஸ்பெயினைச் சேர்ந்த ஆல்பர்ட் காஸ்ரா, ர.்.பேல் நதால் ஜோடியுடன் இந்திய அவுஸ்திரேலிய ஜோடி விளையாடவுள்ளது. (ற)

# சர்வதேச நாடுகளின் உதவிகள் அனைத்தும் பாதிப்பின் அடிப்படையில் பகிரப்பட வேண்டும்

## தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்து

(கிளிநொச்சி)



**சர்வதேச நாடுகளின் அனைத்து உதவிகளும் பாதிப்புக்களின் அடிப்படையில், நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் இதனைச் சரியான முறையில் பகிர்ந்து வழங்கும் என்பது சந்தேகமானதே எனக் குறிப்பிட்டுள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களிடம் கருத்துக் கூறிகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இன்றைய சந்திப்பு முக்கியமாக ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகள், எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு கலந்துரையாடியிருக்கின்றோம். அவ்விடயத்தில் எமது தலைமைப் பீடம் எடுத்துள்ள நிலைப்பாடு சம்பந்தமாகவும் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டியவை சம்பந்தமாகவும் ஆராய்ந்திருக்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு!

***கேள்வி:*** *இந்தியாவில் இருந்து கிடைக்கின்ற உதவிகள் தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?*

**பதில்:** எம்மைப் பொறுத்த வரை சர்வதேசத்தின் அனைத்து உதவிகளும் பாதிப்பின் அடிப்படையில் சரியாகப் பகிரப்பட வேண்டும். அது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஊடாக சரியாகப் பகிரப்படும் என்பது சந்தேகமானதே. தமிழ் மக்களுக்கு அந்தச் சந்தேகம் பெரியளவில் உள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கதின் அண்மைக்கால நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. வட கிழக்கு தமிழர் தாயகத்தின் கரையோரப் பகுதிதான் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கே அந்த உதவிகள் முழு அளவில் வந்து சேர்வதற்கு சர்வதேச சமூகம் ஒரு கட்டமைப்பை நிறுவி அந்த உதவிகளைத் திருப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

***கேள்வி:*** *வடக்கு- கிழக்கில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் இப்போதைய நிலைமை எப்படி இருக்கின்றது?*

**பதில்:** வடக்கு- கிழக்கில் உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகளை உள்ளூர் மக்களினதும் புலம்பெயர்ந்து வாழும் மக்களினதும் ஆதரவோடு சர்வதேச நிறுவனங்களின் உதவியோடும் எங்களுடைய கட்டமைப்புக்கள் இணைந்து ஓரளவு திருப்திகரமாக முன்னெடுத்துள்ளன. எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய பாரிய வேலைத் திட்டங்களுக்குத் தான் நாம் சர்வதேச சமூகத்தின் உதவியைக் கோரியிருக்கின்றோம்.

***கேள்வி:*** *இப்போது அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கின்ற உதவிகள் பற்றி?*

**பதில்:** அரசாங்கத்திடம் இருந்த அரசாங்க அதிபர்கள் மூலமாக ஓரளவு உதவிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவை முழு அளவில் திருப்தியளிக்கக் கூடியளவில் இல்லை.

ஏனெனில், சர்வதேசத்தின் உதவிகள் தெற்கிற்கு அனுப்பப்படும் அளவிற்கு இங்கே அனுப்பப்படவில்லை.

***கேள்வி:*** *குறிப்பாக அரசாங்கத்திடம் இருந்து என்ன விதமான உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள்?*

**பதில்:** சர்வதேசத்திடம் இருந்து வருகின்ற நிவாரணப் பொருட்கள், ஏனைய உதவிகள் அனைத்தும் இப்பகுதிக்கு பாதிப்பின் அடிப்படையில் பகிர்வதற்கும் சர்வதேச சமூகம் நேரடியாக வந்து செய்வதற்கும் எந்தத் தடைகளும் இன்றி அரசு அதற்கான வழிவகைகளை செய்ய வேண்டும்.

***கேள்வி:*** *ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட 15 நகரங்களை புனரமைக்கப் போவதாக அரசு கூறுகின்ற போதிலும் தமிழர் தாயகத்தில் எந்த நகரமும் தெரிவு செய்யப்படாதது பற்றி?*

**பதில்:** ஏற்கனவே, அரசாங்கம் தமிழர் பகுதியை புறக்கணித்து, பாகுபாடு காட்டித்தான் வருகின்றது. அந்த அடிப்படையில் இதன் தொடர்ச்சியாகத் தான் இதுவும் இருக்கலாம் என்று நான் நம்புகின்றேன்.

(ர-4)

# அம்பாந்தோட்டையில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்

(அம்பாந்தோட்டை)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டைப் பகுதியில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஐக்கியதேசியக்கட்சி ஆரம்பிக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரமேதாஸ தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் 10 பாலர் பாடசாலைகள், 10 சனசமூக நிலையங்கள், 10 பெரும் பாடசாலைகள் என்பன அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன..

இவற்றுடன் தொடர்ச்சியாக பல கட்டுமானப் பணிகளை ஐக்கிய தேசியக் கட்சி இந்தப் பகுதியில், மேற்கொள்ளவுள்ள்து என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

# ரயில் பாதைகளின் புனரமைப்பு பணிகள் பூர்த்தியாகும் நிலை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த கரையோர ரயில் பாதைகளின் புனரமைப்பு நடவடிக்கைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் அளவில் நிறைவு செய்ய முடியும் என்று ரயில்வே திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நான்கு கட்டமாக ரயில் பாதைகள் புனரமைக்கப்படவுள்ளன. ரயில்வே திணைக்களத்தின் முழுமையான கண்காணிப்பின் கீழ் கரையோர ரயில்ப் பாதையின புனரமைப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

களுத்துறை முதல் அல்கம வரையிலான ரயில் சேவைகளை பெப்ரவரி முதல் வாரத்தில் ஆரம்பிக்க முடியுமென்று ரயில்வே திணைக்களம் தெரிவிக்கின்றது.

(க-9)

# சீருடைத் துணிகளை யுனிசெவ்வும் வழங்கும்

(கொழும்பு)

சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் யுனிசெவ்வும் சீருடைத் துணிகளை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அடுத்தவாரம் முதல் பிரதேச செயலகம் ஊடாக இந்த சீருடைத்துணிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கிடையில், இவ்வாண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச சீருடைத்துணிகளை சகல கல்வி வலயங்களுக்கும் கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

(க-60)

# பங்கீட்டு அடிப்படையில் அடுத்த வாரம் முதல் உணவு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணமாக அரசு வழங்கவுள்ள பங்கீட்டு அடிப்படையிலான உணவுப் பொருட்கள் அடுத்த வாரம் முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

2800 கிராம் அரிசி அல்லது 450 கிராம் கோதுமை மா,.140 கிராம் பருப்பு, 140 கிராம் சீனி, சமையல் எண்ணெய், 140 கிராம் சோயா கலவை என்பன ஒரு வாரத்துக்கு ஒரு நபருக்கு வழங்கப்படும்.

இவற்றின் பெறுமதி 175 ரூபாவாகும்.

அத்துடன் வீட்டு பாவனைக்குத் தேவையான மேலும் 200 ரூபா பெறுமதியான பொருட்களும் ஒரு வாரத்துக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)







நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அத்துடன் அன்றைய தினம் மல்வத்த பீட மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய சித்தார்த்த ஸ்ரீ சுமங்கள தேரரையும் அவர் சந்தித்தார். தொடர்ந்து ஹில்ட் எஸ்றோண்ஸ் அம்மையாருடன் பீற்றர்சன் அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்து சுனாமியால் சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டார். மேற்படி நிகழ்வுக் காட்சிகளைப் படங்களில் காண்க.

# இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இந்தியா – சீனா நாளை பேச்சு நடாத்தவுள்ளன

(பீஜிங்)

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது, கூடுதல் ஒத்துழைப்பு, சர்வதேச மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக இந்தியாவும் சீனாவும் நாளை திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளன.

இந்தியா - சீனாவுக்கு இடையே நடைபெறும் முதலாவது பேச்சுவார்த்தை இது எனறு வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய குழுவுக்கு வெளியுறவுச் செயலர் ஷியாம் சரணும், சீனத் தரப்பில் அதன் ஆசிய விவகாரங்களுக்கான வெளியுறவுத்துறையின துணை அமைச்சர் வூ டாவீயும் தலைமை வகிக்கின்றனர்.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் கருத்து வெளியிடுகையில்,



காஞ்சிபுரத்திலுள்ள உத்திராதிமட நிர்வாகி ஸ்ரீனிவாச்சாரி நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டார். 150 ஆண்டுகளாக இருந்துவரும் இந்த மடம் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் அருகே அமைந்துள்ளது. இந்தக் கொலை குறித்து விசாரிக்க 3பேர் கொண்ட காவல்துறைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு உறவை மேம்படுத்துவது, உலக மற்றும் பிராந்திய அளவிலான பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்வது ஆகியவையே இப்பேச்சுவார்த்தையின் முக்கிய குறிக்கோளாகும் எனக் குறிப்பிட்டார்.

நிறுத்தப்பட்ட வடகொரிய அணு உலைப் பிரச்சினை குறித்து இருதரப்பினரும் பேசுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. வடகொரிய அணு உலைத்திட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது தொடர்பாக அமெரிக்கா, வடகொரியா, தென்கொரியா, ஜப்பான் மற்றும் ரஷ்யாவுடன் சீனா சார்பில் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்திவந்தார் வூ டாவீ.

அமெரிக்காவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த ஆண்டு செப்டெம்பரில் பீஜிங்கில் நடைபெறவிருந்த 4வது சுற்றுப் பேச்சுவார்த்தை இரத்து செய்யப்பட்டது. ஈரானின் அணு ஆயுதப் பிரச்சினை, போருக்குப் பின் ஈராக் நிலைமை, தீவிரவாதம், உலகமயமாக்கலின் விளைவுகள், ஐ.நா அமைப்பை சீர்திருத்தி அமைப்பது மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் இச்சந்திப்பில் விவாதிக்கப்படவுள்ளது.

அமெரிக்கா போன்ற உலகின் சக்திவாய்ந்த நாடுகளுடனான உறவு வைத்துக்கொள்வது குறித்தும் இருதரப்பு அதிகாரிகளும் விவாதிக்கவுள்ளனர். இருதரப்புப் பேச்சுவார்த்தை முதலில் வூ டாவீ, சரண் ஆகியோருக்கிடையே முதலில நடைபெறும். அதன்பிறகு குழு அளவிலான பேச்சு நடைபெறும்.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.தீக்ஷித் காலமானதால், பேச்சுவார்த்தை பாதிக்காது என்று சீனத்தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்படடுள்ளது. இந்நிலையில் சீன அதிபர் வென் ஜியாபோவ் எதிர்வரும் மார்ச்மாத இறுதியில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## 76 ஆண்டுகள் ஓடி உழைத்த சைக்கிள்

(இலண்டன்)

இலணடனில் உள்ள போக்குவரத்து அருங்காட்சியகத்துக்கு விலைமதிக்கமுடியாத அரிய பொருள் ஒன்று பரிசாகக் கிடைத்திருக்கிறது.

வில்லியம் வேக்ஸ்டா.்ப் என்பவர் கடந்த 76ஆண்டுகளாக இடைவிடாமல் ஓட்டிவந்த சைக்கிள்தான் அது.

1929ஆம் ஆண்டு 13 பவுணுக்கு எ.்ப்.டபிள்யூ.ஈவான்ஸ் என்ற நிறுவனத்தின ரேஸ் சைக்கிளை அவர் வாங்கினார். வாங்கியது முதல் அருங்காட்சியகத்துக்கு வரும்வரை 80 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் வரை அது ஓடியிருக்கிறது. இப்போதும் ஓடும் நிலையில்தான் இருக்கிறது.

வில்லியம் வேக்ஸ்டா.்புக்கு இப்போது வயது 95. இரு ஆண்டுகளுககு முன் காரொன்று அவருடைய சைக்கிள் மீது உரசிவிட்டது. இனி சைக்கிள் ஓட்டக்கூடாது என்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டதால் அதை அருங்காட்சியகத்துக்குக் கொடுத்துவிட்டார். (ற)



இந்தியா வந்துள்ள சிலி நாட்டு அதிபர் ரிக்கார்டோ லாகோஸ் எஸ்கொபர் மற்றும் அவரது துணைவியாரை புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கும், குடியரசுத் தலைவர் எ.பி.ஜே.அப்துல் கலாமும் வரவேற்றனர்.

## உலகின் மூத்த குடிமகன்!

(மியாமி)

உலகத்திலேயே இப்போது மிகவும் வயதான மனிதர் என்று போர்ட்டோரிகோவில் வசிக்கும் எமிலியானோ மெர்காடாவோவைக் குறிப்பிடுகிறது கின்னஸ் உலகசாதனைப் புத்தகம்.

அவருக்கு வயது 113. உலகின் வயதான மனிதர் மட்டுமல்ல உலகின் வயதான முன்னாள் இராணுவ வீரரும் அவர்தான்.

போர்டோரிகோவின் கேபோ ரோஜோ என்ற ஊரில் 1891ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் திகதி எலிமியானோ மெர்காடாவோ பிறந்தார். அமெரிக்க நாட்டின் கரீபியக் கடலோரத்தில் இசபெல்லா என்ற இடத்தில் இப்போது வசித்து வருகிறார்.

முதலாவது உலகப்போரில் பங்குபெறுவதற்காக அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்து இவர் பயிற்சி எடுத்துக்கொண்டார். அவர் அதிஷ்டம் முதல் உலகப்போர் அதற்குள் முடிந்துவிட்டது. இரண்டாவது உலகப்போருக்கு முன்னதாக இராணுவத்திலிருந்து இவர் ஓய்வு பெற்றுவிட்டார். (ற)

## இந்திய – பாக். எல்லையில் தாக்குதல்; விசாரணை நடத்துவதாக பாக். உறுதி!

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் தாககுதல் நடத்தியதாக இந்தியா அளித்த தகவலையடுத்து இந்த எல்லைத்தாக்குதல் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று பாகிஸ்தான சார்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தலைமை துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்.தாக்கூர் கூறுகையில்,

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பாகிஸதான் இராணுவம், இந்திய எல்லை மாவட்டமான பூச் பகுதியில் மார்ட்டர் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது குறித்து பாகிஸ்தானிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகளுக்கு தொடர்பில்லை என்று தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்படட மார்ட்டர் குண்டுகள் பாகிஸ்தான இராணுவத்திற்குச் சொநதமானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.


இதையறிந்த பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கைக்கான தலைமை இயக்குநர்,

நவம்பர் 2003ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டதை அடுத்து மார்ட்டர் போன்ற ஆயுதங்கள் எதுவும் பயன்படுத்தப் பட்டதில்லை.

எனினும் திடீரென இதுபோன்ற மார்ட்டர் குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக இந்தியா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும். இந்தக் குண்டுகள் எங்கிருந்து, எதற்காக இயக்கப்பட்டன என்பது குறித்து விசாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்றதொரு தாக்குதல் மீண்டும் ஏறபடாதவண்ணம் பார்த்துக்கொள்ளப்படும்.

தாக்குதல் நடத்தப்பட்டது குறித்த விபரங்கள் உடனடியாக விசாரிக்கப்பட்டு இந்தியாவிற்கு அளிக்கப்படும். இருநாடுகளும் போர் நிறுத்தம் கடைபிடித்துவரும் நிலையில், இதுபோன்றதொரு தாக்குதல் எவ்வளவு பெரிய பிரச்சினையை உருவாக்கும் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். எனவே இது குறித்து தீவிர கவனம் செலுத்தப்படும் எனறு தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

பீகார் ஜாக்கண்ட் மற்றும் அரினா மாநிலங்களில் அடுத்த மாதம் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் அந்த மாநிலங்களில் சட்டமன்றத் தொகுதிகளில் வேற்பு மனுத்தாக்கல மற்றும் தேர்தல் ப்ணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவரும் ரயில்வே அமைச்சருமான லாலு பிரசாத் வெளியிட்டார்.



## மூவரின் உயிரைக் காத்த நாய்!

வீட்டுக்குக் காவலன் என்று அழைக்கப்படும் வளர்ப்புப்பிராணி நாய் தனது எஜமானின் குடும்பத்தினரின் உயிர்க் காவலனாக மாறியுள்ளது.

சமயோசிதமாகச் செயல்பட்டு மூவரின் உயிரைக் காப்பாற்றியுள்ளது வளர்ப்பு நாயொன்று. இச்சம்பவம் தென்மேற்கு சீனாவின் சிசுவான் மாகாணத்தின் செங்குடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த டான் அவருடைய மனைவி மற்றும் மகள் வீட்டில் இருந்தபோது சமையல் காஸ் கசிவு ஏற்பட்டு மூவரும் மயக்கமடைந்தனர். அப்போது மயக்கநிலைக்குச் சென்ற ஜேர்மன் ஹாபாட்டு இனத்தைச் சேர்ந்த லிங்லிங் என்ற அவர்களுடைய வளர்ப்பு நாய் மிகவும் சமயோசிதமாகச் செயல்பட்டது. தனது எஜமானரை எழுப்ப முயனறது. ஆனால், அது வெற்றிகரமாக முடியாததால், அவருடைய சட்டையைப் பிடித்து இழுத்து வீட்டின் ஹோலில் உள்ள ஜன்னலுக்கு அருகில் கொண்டுசென்றது.

குளிர்காற்றுப் பட்டதும் மயக்கநிலையில் இருந்து மீண்டார் டான். உடனடியாக மற்றவர்கள் உதவியுடன் மனைவி மற்றும் மகளை மருத்துவமனையில் சேர்த்தார். சிறிதுநேரம் தாமதித்திருந்தால் அவர்கள் இருவரையும் உயிருடன் மீட்டிருக்கமுடியாது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம்தான் இந்த நாயை வாங்கினார் டான். ஏற்கனவே இவர்கள் வீட்டில் திருடவந்தவர்களை லிங்லிங் விரட்டியுள்ளது எனறு பெருமையுடன் கூறுகின்றனர் டான் குடும்பத்தினர். (ற)

## பக்தாத்தில் மசூதி வாசலில் கார்க்குண்டுத் தாக்குதல்

### 14 பேர் பலி; 40 பேர் வரை படுகாயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள ஷியா முஸ்லிம்களின் மசூதி நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பக்தாத்தின் தென்மெற்குப் பகுதியில உள்ளது அல் - தா.்ப் மசூதி பக்ரீத்தை முன்னிட்டு ஏராளமான முஸ்லிம்கள் மசூதிக்குத் தொழுகை செய்யச் சென்றிருந்தனர்.

தொழுகையை முடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது வேகமாக வந்த கார் ஒன்று மசூதி வாயில் அருகே வெடித்தது.

இதில் 14 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த பலர் உடனடியாக மருத்துவமணைக்குக் கொணடுசெல்லப்பட்டனர்.

ஈராக்கின் சுன்னிப் பிரிவு முஸ்லிம்களின் தலைவர் அபுமுசாப் சர்காவி. அமெரிக்கப்படைகளுடன் இணைந்து ஷியா முஸ்லிம்கள் மீது தாக்குதலில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)


'சந்திரமுகி'
ரஜினி - நயன்தாரா
பிரபு - ஜோதிகா

# பிப்ரவரி - 14

தனுஷ் நடித்த 'சுள்ளான்' படத்தைத் தயாரித்த சேலம் ஏ.சந்திரசேகரன் வழங்கும் ஸ்ரீ சரவணா கிரியேஷன்ஸ் இளமையும், புதுமையும் நிறைந்த துள்ளலான காதல் கதையை மையமாகக்கொண்டு அதிகப் பொருட்செலவில் பிரம்மாண்டமாகத் தயாரிக்கும் படம் 'பிப்ரவரி - 14'.

'பாய்ஸ்', '4ஸ்டுடண்ட்ஸ்', 'செல்லமே' மற்றும் இயக்குனர் ஷங்கர் தயாரிப்பில் 'காதல்' ஆகிய படங்களில் நடித்த இளம் கதாநாயகன் பரத் இதில் கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக இளம் நாயகி ரேணுகாமேனன் நடிக்கிறார்.

மற்றும் இவர்களுடன் பிரமிட் நடராஜன், ரவிபிரகாஷ், ஜானகி சபேஷ், ஜெயம் புகழ் சுமன் ஷெட்டி உட்பட பல முன்னண' நட்சத்திரங்கள் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கத்தைப் புதிய இயக்குனர் எஸ்.பி.ஹோசிமின் ஏற்றுள்ளார்.

இப்படத்தை இளமையும், புதுமையும் நிறைந்த கிராபிக்ஸ் கலக்கலுடன்பிரம்மாண்டமாக இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

---

# புதுமுகங்களின் 'களஞ்சியம்'

ஏ.எம்.பிலிம்ஸ் எனுடர் நிறுவனம் சார்பில் ப.லட்சுமணன், பி.கே.பாலு இணைந்து தயாரிக்கும் புதிய படம் 'களஞ்சியம்'. இப்படத்தின்மூலம் எம்.மதி சரண் இயக்குனராக அறிமுகமாகிறார்.

சுபாஷ் எனும் அறிமுக நாயகனுடன் புது கதா நாயகி அறிமுகமாகிறார்.

நாசர், சரண்யா, சீதா, கருணாஸ், ராஜேஷ், சாலி, பொன்னம்பலம், சீசா மனோகர், கிரேன் மனோகர் ஆகியோர் நடிக்கின்றனர்.

காதலும் வீரமும் கலந்த முற்றிலும் வித்தியாசமான படைப்பாக 'களஞ்சியம்' தயாராகிறது. ஆர்.செல்வா ஒளிப்பதிவு செய்கிறார். இசை - சசி, கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - எம்.மதி சரண்.


'ஏபிசிடி'
சினேகா

# சினிமாச் சிதறல்

சிட்டிசன் டைரக்டர் சரவண சுப்பையாவின் அடுத்த படம் 'ஏபிசிடி'. ஹரோ-ஷாம. சினேகா, அபர்ணா, சக்ஸஸ் நந்தனா ஆகிய மூவரும் கதாநாயகிகளாக நடிக்கினறனா.

* * *

'ராஸ்கல்' என்ற டைட்டிலுக்கு எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து 'காதல்மொழியே' எனப் பெயர் மாற்றவிருக்கிறார்கள்.

* * *


**உமாவின் தங்கை ப்ரீத்தியும் நடிக்க வருகிறார். படத்தின் பெயர் 'கண்ணா'.**

* * *

'பெருமாள்சாமி' படத்தில் சத்யராஜுக்கு ஜோடியாக பழைய நடிகை ரூபிணி நடிக்கிறார். சிபிராஜுக்கு ஜோடியாக பழைய கவர்ச்சிக் குலுக்கல் பபிதாவின் மகள் நடிக்கிறார்.

* * *

பஞ்சு அருணாசலம் தயாரிப்பில் உருவான 'காதல் சாம்ராஜியம்' விரைவில் வெளிவர உள்ளது. படத்தின் இயக்குனர் அகத்தியன், தேனப்பன் தயாரிப்பில் மாதவன் நடிக்க ஒரு படம் இயக்கவுள்ளார். இதில் தன் மகளை நாயகியாக அறிமுகம் செய்கிறார் அகத்தியன்.


'டான்சர்'

# கவர்ச்சியாக நடித்தால் தப்பில்லை - மீனா!



பிரபல கமராமேன் நிவாஸ் ஒளிப்பதிவு செய்து இயக்கும் படம் 'மானிடன்'.

வரம்புமீறி பிழை செய்கிறவர்களை 'அட மானிடப் பதரே' என்பார்களே... அந்த அர்த்தத்தில்தான் மானிடன் எனப் படத்துக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள்.

அதென்ன எல்லை மீறிய பிழை என்கிறீர்களா?

தான் எப்போதோ பார்த்து ரசித்த பெண் தனக்கு அண்ணியாக வந்தபிறகும் அண்ணிமேல் காமம் கொண்டு அலைகிற இளைஞனைப் பற்றிய கதைதான் 'மானிடன்'.

இப்படி ஒரு வில்லங்கமான கதையில் மீனா நடிக்க ஒப்புக்கொண்டது எப்படி? இதுபற்றி அவரிடம் கேட்டபோது,

ஒரு நல்ல மெசேஜ் உள்ள கதை. அதனால்தான் நடிக்க சம்மதிச்சேன்.

என்ன மெசேஜ்?

மனிதனுக்கு சமூகம் விதித்திருக்கிற கட்டுப்பாடுகளை மனிதன் மறக் கூடாது. மறினால் பின்விளைவு மிக மோசமாக இருக்கும் என்பதுதான் மெசேஜ்.

மெசேஜ் எப்படி இருந்தாலும் காட்சிப்படி கவர்ச்சியாக நடிக்கவேண்டியிருக்குமே?

கண்ணை உறுத்தாத கதைக்கு தேவைப்படுகிற கவர்ச்சியில் நடித்தால் தப்பில்லை எனச் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

# திருப்பாச்

## திரை விமர்சன

கிராமத்தில் அரிவா பட்ட
வைத்திருப்பவன் சிவகிரி. அவ
தங்கை கற்பகம்.
சென்னை மாப்பிள்ளைக்குத்
கையைக் கட்டிக்கொடுத்து அ
டன் நகரத்துக்கு வருகிறான்.
அங்கு சிவகரி கண் எதிரில்
கிறது. நல்ல குடும்பத்தினர் வசிக
நடத்தியதை எதிர்க்கும் அய்யாரி
இன்னொருவனை பட்டாசுகளைக்
முயல சிவகிரி காப்பற்றுகிறான்.
ரவுடிகள் மது ஆத்திரப்ப
தடுத்து ஊருக்கு அனுப்புகிறான்
வெளிநாட்டில் வேலை கிடைக்க
சிவகிரி சென்னை வர திருப்பம்
தியேட்டருக்குச் சென்ற
வாக்குவாதம் ஏற்பட தாதா சன
படுகிறான் நண்பன். நண்ப பி
சிவகிரிக்கு வெறி... திருப்பரில் ே
றோரிடம் பொய் சொல்லிவிட்டு ம
செய்கிறான்.
பொலிஷ் இன்ஸ்பெக்டராக
யோடு தாதாக்கள் பட்டியலை
வேகம் கொள்கிறான். ரவுடிகள்
ரவியைக் கொலை செய்து சனி
கிளைமாக்ஸ்...
சிவகிரியாக வரும் விஜய்க்கு
அடிதடி என வெளுத்துள்ளார். தா
சடைபோட்ட பெண்ணின் கூந்தை
றுதலாக அவள் தாயின் கூந்தலை
துக் கிராமத்தில் ஆடு, கோழிகளை
தைத் தடுக்கப்போய் தானே பலி
முழிப்பது... தங்கையைப் பெண்ப
நினைத்துத் துவைத்து எடுப்பது..
முடியும் என நிரூபித்துள்ளார் வி
தாதாவுக்குத் துணையாக
யும், ரவுடிகளையும் முகத்தில்
கொண்டு வெட்டிச்சாய்ப்பது ஆ
யாகவுள்ளது.
பொலிஸ் அதிகாரி மகளைக்
டைக்குள் தந்திரமாய நுழைந்து அ
மக்கள் கூட்டத்துடன் சென்று ச
சனியன் சகடையுடன் நட
யுத்தக் களத்தை நினவுபடுத்தும்
வந்துவிட்டுப்போகிறார். ச ஆட்
போடா. என்று பேசுவது காமெடி
நண்பன் கண்ணப்பனாக வ
படும் பரிதாபமான பாத்திரத்தில் ெ
கற்பகமாக வரும் மல்லிகா பாச
கிறார். கிராமத்துப் பெண் சாயலில்
யாக வரும் கோட்டா சனிவாசரா
பசுபதி பயமுறுத்தும் வில்லன்கள்
சாயாசிங் ஒரு பாட்டுக்கு வ
டுப் போகிறார். லிவிங்ஸ்டன், வை
எம்.என்.ராஜம் எனப் பலர் நடிக்க
அக்ஷன் ஆகியவற்றைக் கலந்து
உள்ளார் இயக்குனர் பேரரசு.
ஆட்டம்போட வைக்கும் ரகம். எ
களத்தை நிஜப்படுத்துகிறது.

*திருப்பாச்சி... விறுவி*



# புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின் வவு .மாவட்டத்தில் தற்கொலை வீதம் வீழ்ச்சி

## ஆய்வுகள் மூலம் கண்டறிவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு 46பேர் தற்கொலை செய்துள்ளனர். 338பேர் தற்கொலை செய்ய முயற்சி செய்துள்ளனர்.

அத்துடன் கடந்த எட்டு ஆண்டு காலத்துடன் ஒப்பிடும்போது தற்கொலை செய்து கொள்பவர்களுடைய வீதம் 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெகுவாகக் குறைந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளதென வவுனியா மாவட்ட சுகாதார சேவைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு நாட்டில் யுத்த சூழல் மறைந்து சமாதானம் நிலவுவதனால் உளரீதியான தாக்கங்கள் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்கொலைக்கு முயற்சிப்பவர்களின எண்ணிக்கை அரைவாசியாக குறைவடைந்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கையும் குறைந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வெண்ணிக்கை யுத்த காலத்துடன் ஒப்பிடுமபோது அரைவாசிக்கு மேல் குறைநதுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம சமூகத்தில் ஏற்படுத்திய ஓர் முக்கிய தாக்கமாக இதனை எடுத்துக்கொள்ளலாம். அத்தோடு பல அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள உளநல சிகிச்சை நடவடிக்கைகளும் உளத்துணை ஆலோசனை சேவைகளும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றன.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் வவுனியா மாவட்டத்தில் உளரீதியிலான தாக்கங்கள் குறைந்துள்ளதாகவே ஆய்விலிருந்து தெரியவருகின்றது.

எனவே, சமாதான முயற்சி தொடரப்பட்டு நிரந்தர சமாதானம் முன்னெடுக்கப்பட்டு நிரந்தர சமாதானம் எட்டப்படுமானால் தற்கொலை செய்து கொள்பவர்களுடைய தொகை மேலும் குறைவடையலாம். குறிப்பாக 10 தொடக்கம் 30 வயதிற்குடபட்ட இளைஞர், யுவதிகள் மத்தியிலேயே தற்கொலை வீதம் அதிகரித்து காணப்படுகின்றது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

# மருத்துவசபையில் இருந்து விலக அரச வைத்தியர்கள் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்கள் மருத்துவ சபையிலிருந்து விலகுவதென முடிவெடுத்துள்ளதாக அரசாங்க மருத்துவசங்கப் பேச்சாளர் வைத்திய கலாநிதி சுமிந்ததேரர் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் இதுகுறித்து தெரிவிக்கையில்,

ரஷ்யாவில் மருத்துவ பயிற்சி பெற்ற 44 பேரை தமது மருத்துவ சபையின் கீழ் பதிவுசெய்ய மருத்துவ சபை தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத காரணத்தினால் குறிப்பிட்ட சபையிலிருந்து வெளியேற நாம் தீர்மானித்திருக்கின்றோம்.

அத்துடன் சர்வதேச ரீதியில் அங்கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் எமது அங்கத்துவத்தை பெறவிருக்கிறோம்.

இதேவேளை, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அன்று அரசாங்க மருத்துவ சபையின் பொதுக்கூட்டமும் இடம்பெறவிருக்கிறது.

அதன் பின்னர் அரசாங்க மருத்துவர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவிருக்கிறார்கள்.

எனினும் சுனாமி அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களில் அரசாங்க மருத்துவர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். இந்நிலையில் சுகாதார அமைச்சர் எமது பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வைக்காண முன்வர வேண்டும். (க-09)

# மாவட்ட ரீதியாக இயங்கும் நிறுவனங்களின் தொகை மதிப்பீடு

2003/2004 ஆண்டில் மாவட்ட ரீதியாகச் செயற்படும் நிறுவனங்களினதும் அதில் பணியாற்றும் ஆளணியினரதும் எண்ணிக்கை முதலியவற்றை உள்ளடக்கிய கைத்தொழில தொகை மதிப்பீடு, தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பத்துக்குக் குறைந்த ஆளணியினரைக்கொண்டு யாழ்ப்பாணததில் இயங்கும் 2ஆயிரத்து 684 நிறுவனங்களில் 6ஆயிரத்து 933ஆளணியினரும், 10க்குக் கூடிய ஆளனியைக் கொண்ட 113 நடுத்தர மற்றும் பாரிய கைத்தொழில் நிறுவனங்களில் 2ஆயிரத்து 224 ஆளணியினரும் கடமையாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மதிப்பீட்டின்படி பத்துக்குக் குறைந்த ஆளனியினரைக் கொண்டு மன்னாரில் 413, வவுனியாவில் 567, முல்லைத்தீவில் 492, கிளிநொச்சியில் 441, மட்டக்களப்பில் ஆயிரத்து 898, திருகோணமலையில் ஆயிரத்து 487 நிறுவனங்களும் பத்துக்குக் கூடுதலான ஆளனியினரைக்கொண்டு மன்னாரில 20, வவுனியாவில் 37, முல்லைத்தீவில் 36, கிளிநொச்சியில் 25, மட்டக்களப்பில் 120, திருகோணமலையில் 38 நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

பத்துக்குக் குறைந்த ஆளனியினரைக் கொண்ட நிறுவனங்களில் மன்னாரில் ஆயிரத்து 83பேரும், முல்லைத்தீவில் ஆயிரத்து 456 போரும், கிளிநொச்சியில் ஆயிரத்து 188பேரும், மட்டக்களப்பில் 4ஆயிரத்து 764பேரும், திருகோணமலையில் 3ஆயிரத்து 254பேரும் பணிபுரிகின்றனர்.

மேலும் பத்துக்கு மேற்பட்ட ஆளனியினரைக் கொண்ட நிறுவனங்களில் மன்னாரில் 336பேரும், வவுனியாவில் ஆயிரத்து 177பேரும், முல்லைத்தீவில் 630பேரும், கிளிநொச்சியில் 732பேரும், மட்டக்களப்பில் 2ஆயிரத்து 752பேரும், திருகோணமலையில் 2ஆயிரத்து 998பேரும பணிபுரிந்து வருவதாக அந்த மதிப்பீட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# பொத்துவில் பதிவாளர் அலுவலகம் சுனாமியால் முற்றாகச் சேதம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் பொத்துவில் பதிவாளர் அலுவலகம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

கடல்நீர் அலுவலகத்தினுள் முற்றாக உட்புகுந்ததால் அங்கிருந்த முக்கிய ஆவணங்கள் உட்பட பெருமளவான ஆவணங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன் சேதமடைந்துமுள்ளன. அனர்த்தத்தின் பின்னர் அங்கு மீட்கப்பட்ட ஆவணங்கள் வெய்யிலில் காயவைத்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயினும், சுனாமி அனர்த்தத்தினால் இப்பகுதியில் உயிரிழந்தவர்கள் தொடர்பான இறப்புக்களின் மரணப் பதிவுகள் எவ்வித தடையுமின்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார். (ற-19)

## நடமாடும் சேவை

(பொன்னாலை)

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் 'கியூடெக்' நிறுவனம் நடமாடும் மருத்துவ சேவையை வழங்கி வருகின்றது. (ப-49)

## பரீட்சை

இணைந்த சேவைகளைச் சேர்ந்த பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதிவுனர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவையைச் சேர்ந்த தரம் II 'ஆ' விலுள்ள உத்தியோகத்தர்களை தரம் II 'அ'ற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் 2005 இல் நடைபெறவுள்ளதாகப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-47)

# சுகாதார நிலையங்களை புனரமைக்க வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வருகை

(கிளிநொச்சி)

சுனாமி பேரலைகளினால் சேதமடைந்த வைத்தியசாலைகளையும் சுகாதார நிலையங்களையும் துரிதகதியில் மீள நிர்மாணிக்காவிட்டால் சுகாதாரதுறையில் பல்வேறு சிக்கலகளை எதிர்நோக்க நேரிடும் என பாதிக்கபபட்ட பிரதேசங்களின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேங்களில் சுகாதார சேவையை முன்னெடுக்கும் பொருட்டு தற்காலிக நடவ்டிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் அது போதுமானதாக இல்லை.

திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகள் உட்பட 41 வைத்திய நிலையங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

அத்துடன் பகுதியளவில் சேதமடைந்த வைத்தியசாலைகள் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 46 ஆக உள்ளது. அழிவடைந்த, சேதமடைந்த வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்களின் பெறுமதி 7ஆயிரம் மில்லியன் ரூபாவாகும்.

இதேவேளை சேதமடைந்த வைத்திய சாலைகள் சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளது.

இவற்றை மீள நிர்மாணிப்பதற்கான கட்டுமான அமைப்புகள் மற்றும் மதிப்பீடுகளைத் தந்துதவுமாறு இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளன. (ற-8)

# விஷேட மாநாடு

(திருநெல்வேலி)

சனாமியால் பாதிக்கப்பட்ட வட பகுதி மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயும் விஷேட மாநாடு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இடம் பெறவுள்ளது.

இம்மாநாட்டில் கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில், நவீன முறையில் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளன.

'மல்ரிடேபோட்' பயன்படுத்தி மீன்பிடிப்பது உட்பட மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள குறித்தும் இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது. (ற-43)

# மன்னாரில் நில அதிர்வு? ஆராய விஷேட குழு

மன்னார் மாவட்டத்தில் முத்தரிப்புத்துறை கடற்கரை கிராமத்தில் உள்ள ஆறு வீடுகளின் நிலப்பகுதியில் சிறிய வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் குறிப்பிட்ட வீடுகளில் நிலப்பகுதியில் திடீரென வெடிப்பு ஏற்பட்டதாக தமக்கு அறிவிக்கப்பட்டதென அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை உடனடியாக பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி நிலையத்திற்கு இரவே அறிவித்ததாகவும், இந்த நில வெடிப்பு நில அதிர்வினால் ஏற்பட்டதா? என்பது குறித்து உடனடியாகக் கூற முடியாதுள்ளது என்றும் அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.

இந்த விடயத்தை ஆராயும் பொருட்டு பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி நிலைய அதிகாரிகள் முத்தரிப்புத்துறை கிராமத்துக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வீடுகளில் நில வெடிப்பு ஏற்பட்டதன் காரணமாக அப்பகுதிகளில் குடியிருந்த மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ற-9)

## முன்பள்ளிகள் சேதம்

தொண்டமனாறு தொடக்கம் மருதங்கேணி சுண்டிக்குளம் வரையிலான கரையோரப் பகுதிகளிலுள்ள 21 முன்பள்ளிகள் இயங்க முடியா நிலையில் சேதமடைந்துள்ளன.

இவ் முன்பள்ளிகளில் கிட்டத்தட்ட 700 சிறார்கள் கல்விபயில்வதுடன் 38 ஆசிரியாகள் பணியாற்றுகின்றனர்.

வடமராட்சி கிழக்கிலும் 20 முன்பள்ளிகள் சேதமடைநதுள்ளன. இதில 30 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட முன்பள்ளிகள் குறித்த விபரங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளதாக முன்பள்ளி உதவி கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (க-35)

## ஆசிரியர் பற்றாக்குறை

கொடிகாமம் தவசிக்குளம் றோமன கத்தோலிக்க அரசினர் தமிழ்க்கலவன பாடசாலை ஒரே ஒரு ஆசிரியருடன் இயங்கி வருகிறது.

இதனால் அப்பாடசாலை சிறார்களின் கல்விநிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இப்பாடசாலையல் ஐந்தாம் வகுப்பு வரையுமே வகுப்புக்கள் நடைபெறுகிறது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பாடசாலைக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை இப்பகுதி மக்கள் வேண்டியுள்ளனர். (க-35)

## அந்தியேட்டி கிரியை

(மருதங்கேணி)

சுனாமி அனர்த்தத்தினால் மரணமானவர்களுக்கான அந்தியேட்டிக் கிரியைகளை இலவசமாக மேற்கொள்வதற்கு அனைத்துலக சைவ குருமார் அர்ச்சகர் பேரவை முன்வந்துள்ளது.

அந்தியேட்டிக் கிரியைகளை மேற்கொள்பவர்கள் இறந்தவர்களின் உருவப்படத்துடன் புலோலி தெற்கு எரிஞ்சம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள அந்தயேட்டி மண்டபத்திற்கு நாளை திங்கட்கிழமை காலை வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற35)

# மின்சாரசபை ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படாது

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது என சபையின் தலைவர் ஆனந்தகுணசேகர தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரசபையை விரைவில் மறுசீரமைக்கவுள்ளோம். ஆனால் அவற்றை தனியார் மயப்படுத்தமாட்டோம்.

மின்சார உற்பத்தியையும், விநியோகத்தையும் சீரமைக்கும் நோக்கத்துடனேயே மின்சாரசபையை மறுசீரமைக்கவுள்ளோம்.

இதற்கமைய மின்சார உற்பத்திப் பணிகள் 2 நிறுவனங்களிடமும், மின்சார விநியோகப் பணிகள் வேறு 5 நிறுனங்களிடமும் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனங்கள் யாவும் அரசாங்கத்திற்குச் சொந்தமானது.

எனவே இந்த மறுசீரமைப்புத் திட்டத்தினால் எந்தவொரு ஊழியரும் பதவியை இழக்கவோ அல்லது சம்பளக்குறைப்புக்கு உட்படவோ மாட்டார்கள் எனவும் அவர் மேலும் உறுதியளித்தார். (க-60)

## இன்று ஒரு தகவல்

# பல்

சிலரைப் பார்த்து "முறுக்கு சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டால் கோபம் வந்துவிடும் என்ன காரணம்? அவர்களுக்கு பல் ஆட்டம் கொடுத்துவிட்டதுஎன்று அர்த்தம். பல் சரியாக இல்லாவிட்டால் முறுக்கை எப்படிக் கடிக்க முடியும்? முடியாததைக் கேட்டால் கோபம் வராமல் என்ன் செய்யும் ஆனாலும இதில் ஒரு நன்மை உள்ளது. இவர்கள் கோபத்தை முகத்தில் காட்டுவார்களே தவிர... அதற்காகப் பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். கடித்தால் இன்னும் வலிக்க ஆரம்பித்துவிடும்.

இவ்வளவு கஷ்டமும் எதனால்? பல்லை சரியாகக் கவனிக்காததனால்தான்! பல்லுக்குத் தீமை தரும் விரோதி வெளியே இல்லை உள்ளேதான் இருக்கிறது. நமது வாயினுள்ளே 200 முதல் 300 வகையான பக்டீரியாக் கிருமிகள வாடகை எதுவுமில்லாமல் வாசம் செய்து கொண்டிருக்கின்றன. சும்மா இல்லை இவற்றில் சில தமக்கு உதவி செய்கின்றன. உபத்திரவம் செய்வதில்லை.

உடம்பில் விற்றமின் உண்டாவதற்குச் சில கிருமிகள் ஒத்தாசை புரிகின்றன. நாம் சாப்பிடும் உணவு சமிபாடு அடைவதற்குச் சில உதவுகின்றன. தொண்டைக் குழாயில் நோய் வராமல் தடுப்பதற்கு சில உதவுகின்றன. உதவி செய்வதற்கு எனச் சில இருப்பது போல் உபத்திரவம் தருவதற்கும் சில கிருமிகள் உள்ளன.

பல்,தொண்டை,குடல் போன்றவற்றிற்கு தீமை செய்யக கூடிய பக்டீரியா கிருமிகளும் நமது வாய்க்குள் உள்ளன. இவை சாதாரண கண்களுக்குத் தெரிவதில்லை. ஒரு நாளைக்கு நமது வாயினுள் ஒரு கொலன் எச்சில் உற்பத்தியாகின்றது. இது பல்லைத் தொடர்ந்து சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்கும். பல்லில் வலி இல்லையென்பதனால் பல்லில் வலி இல்லை என்று நினைத்துவிடக் கூடாது என்கிறார் ஒரு டாக்டர்.

அதெல்லாம் இருக்கட்டும். பல்லைப் பாதுகாப்பதற்கு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள் என்பது தானே உங்களது கேள்வி. வழி உள்ளது... பல் வைத்திய நிபுணர் கள் நான்கைந்து குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு முறை சாப்பிட்ட பின்பும் நன்கு பல்லைத் துலக்க வேண்டுமாம். பல்லுக்கு இடையில் உணவுப் பொருள தங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். வேளைக்கு ஒரு தடவை விளக்க வேண்டும் என்கிறார்கள் நம்மில் சிலர். ஒரு நாளைக்கு ஒருமுறை மறக்காமல் பல் விளக்கினால் போதாதா?

புளோரைட் உள்ள பற்பசையை உபயோகப்படுத்தினால் பல் எனாமல் உறுதியாகுமாம். அமிலத் தாக்குதலிலிருந்து பல்லை பாதுகாக்கலாமாம். பல் சொத்தையாகி ஆழமான குழிகள் ஏற்படும் போது ஆரம்பத்தில் வலி ஏற்படுவதில்லையாம். அதுதான் வலிக்கவில்லையே என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. மருத்துவரிடம் போகவேண்டும.

இனிப்பும் அதிகமாக சாப்பிடக் கூடாது. சாப்பிடும் நேரம் தவிர இடைவெளியில் எதையாவது வாங்கிச் சாப் பிட்டுக் கொண்டிருக்கக்கூடாது அவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறைக்க வேண்டும். சர்க்கரைப் பொருள் எதையாவது சாப்பிட்டால் உடனே பல் துலக்க வேண்டியது அவசியம். இவையெல்லாம் நம்மால முடியாத காரியம் தான். கொஞ்சம் அக்கறை வேண்டும் அவ்வளவு தான்.

இந்தக் காலத்தில் பலருக்கு வாய் நீளம் என்று சொல்கிறோமல்லவா? அதுபோல அந்தக் காலத்தில் மனிதனுக்குப பல் நீளம். ஒரு இலட்சம் வருடங்களுக்கு முன்னால் நமது முன்னோர்களுக்கு பற்கள் மிகவும் நீளமாக இருந்ததாம். அப்போதிருந்த நீளத்தில் பாதி அளவுதான் இப்போது நமக்கு உள்ளதாம்.1000 வருடத்திற்கு ஒரு சதவீதம் என்ற அளவில் நீளம் குறைந்து கொண்டே போகிறதாம். இப்படியே போய் ஒருகாலத்தில் மனிதனுக்கு பல்லே இருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர். பல்லில்லாத மனிதனைப் பார்ப்பதற்கு இன்னும் ஒரு இலட்சம் வருடங்களுக்கு மேல் ஆகும். இருந்தாலும் நாம் நமது பல்லைக் கவனிக்கும் விதத்தைப் பார்த்தால் அந்தக் காலம் வெகுவிரைவில் வந்துவிடும் போல் உள்ளது.

பல் போனால் சொல் போய்விடும் சார் அவ்வளவு ஏன்? இப்போது ஒருவரிடம் போய் 10ரூபா கைமாத்து கேட்பது என்றாலும் கூட பல்லைத்தான் காட்ட வேண்டியுள்ளது. ஒருவர் சிரித்தால் அதை முல்லைப்பூ சிரிப்பு என வர்ணிக்கிறோம்! எதனால்? பல் பளிச்சென்று அழகாக இருக்கிறது என்று அர்த்தம். ஒருவர் சிரிக்கிறார் என்பதை தெளிவாக அடையாளம் காட்டுவதே அவரது பல்தான். பல் இல்லாவிட்டால் அவர் சிரிக்கின்றாரா அழுகின்றாரா என்று கண்டு பிடிப்பதே கஷ்டமாகிவிடும். இவற்றை நடைமுறையில் புரிந்து கொள்ளுங்கள்.

சில பேர் பல் உறுதியைக் காட்டுவத்றகாக ஒரு பெரிய வாகனத்தில் கயிற்றைக் கட்டி அதைப் பல்லால் கடித்து இழுத்துக் காட்டி சாதனை செய்வதுட உண்டு. அப்படி நமது ஆள் ஒருவர் சாதனை செய்தார். மறுநாள் அவரை ஒருவர் சந்தித்தார் "என்ன சார் பஸ்ஸை கயிற்றால் கட்டி அதைப் பல்லால் கடித்து இழுத்தீர்களாமே! வந்ததா?" என்றார். 'வந்தது' என்றார் இவர். "எது ? பஸ்ஸா?"என்று கேட்டார் அவர். "இல்லை! பல்" என்றார்.இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலங்கையில் 2006 ஆம் ஆண்டு இறுதிவரை அமெரிக்கப் படைகள் நிலைகொண்டிருக்கும்

## அரச உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்தி வெளியீடு

(கொழும்பு)

**ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அழிந்து போயுள்ள உட்கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்பும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உதவி புரியவென வந்துள்ள அமெரிக்கப் படையினர் அடுத்தவருட இறுதிவரை இலங்கையில் நிலைகொண்டிருப்பர் என அரச உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.**

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவி புரியவென 1,657 அமெரிக்க படையினர் உட்பட 2,517 வெளிநாட்டு படையினர் இலங்கையில் தற்போது உள்ளனர். காலி, கட்டுநாயக்க விமான நிலையம், யாழ்ப் பாணம் உட்பட சில இடங்களில் அமெரிக்கப் படையினர் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 39 பேர் மருத்துவர்கள் 676 பேர் கேகாலைக் கடலில் தரித்துள்ள அமெரிக்காவின் 'தலுத்' என்ற கப்பலின் சிப்பந்திகள் ஆவா. அத்துடன், 317 போ கட்டுநாயக்க விமான நிலையத்திலும் 221 பேர் கொழும்பிலும் 404 பேர் காலியிலும் 39 பேர் யாழ்ப்பாணத்திலும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கேகாலைக் கடலில் தரித்துள்ள அமெரிக்க கப்பலில் சி.எச்.46 ஈ ஹெலிகொப்டர்கள் நானகும் 180 தொன் சரக்கை தரையில் ஏற்றிச் செல்லக்கூடிய பாரஊர்தி ஒனறும் மற்றும் பொறியியல் தளபாடங்களும் உள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜதந்திரிகள் பலரும் தமது நாட்டுப் படைகள் இங்கு பணி முடிந்ததும் நாட்டுக்கு திரும்பி விடும் என்று தெரிவித்திருந்தனர். அதாவது, இங்கு மீள்கட்டுமானம் மற்றும் இயல்பு நிலையை மீள ஏற்படுத்தும் பணிகளை முழுமையாகச் செய்து முடிக்கும் வரை, கிட்டத்தட்ட அடுத்தவருட இறுதி வரை அமெரிக்கப்படைகள் இங்கு நிலைகொள்ளும் என்றும் அவை தெரிவித்துள்ள நிலையில் அரச உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி மேற்படி ஏஜென்சி செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# நிவாரண கூப்பன்களை வழங்க அரசாங்கம் துரித நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண பங்கீட்டு அட்டைகள் உடனடியாகவே வழங்கி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதனடிப்படையில் அனைத்து நிவாரண பங்கீட்டு அட்டைகளும் தறபோது மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அத்தியா வசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரி வித்தார்.

இவற்றிலும் குறைபாடுகள் ஏற்படுமாயின் மாவட்ட செயலாளர்களின் கோரிக்கைக்கு அமைய உணவு முத்திரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு வாரத்திற்கு 375 ரூபா பெறுமதியான நிவாரண பங்கீட்டு அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

தேவைப்படுமானால் இதில் 200 ரூபாவை நிதியாகப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிக்மாக வீட்டு உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்காக சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2500 ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## இராசி பலன்

**23.01.2005**
**(தை 10 ஞாயிற்றுக்கிழமை)**
**திரயோதசி நண்பகல் 12.33 மணிவரை**
**திருவாதிரை முன்னிரவு 9.43 மணிவரை**
**இராகுகாலம் 5.06 - 06.36 மணிவரை**
**சுபநேரம் 9.36 - 11.06 மணிவரை**

- **மேடம்** கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, கீர்த்தி, நண்பர்கள் உதவி.
- **இடபம்** கடின வார்த்தை, அதிக செலவு, முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு.
- **மிதுனம்** சிந்தனை மிகுதி, நல்லமுயற்சி, நண்பர்கள் சந்திப்பு, புதிய தகவல்.
- **கடகம்** உறவினர் வெறுப்பு, காரிய அலைச்சல், சுபசெலவு, நித்திரைக் குறைவு.
- **சிங்கம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், வாக்கு மேன்மை, தனலாபம், தொழில் விருத்தி.
- **கன்னி** செய்தொழில் நன்மை, உற்சாகமான நிலை, முயற்சி கைகூடும், போசன நன்மை.
- **துலாம்** பிதாசிந்தை, காரிய தாமதம், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு.
- **விருச்சிகம்** எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பிறர் உதவி, உடல்நலக்குறைவு.
- **தனுசு** களஸ்திர நன்மை, உற்சாகமான நிலை, காரிய அனுகூலம், பண வருவாய்.
- **மகரம்** நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். புதிய தகவல், போசன சுகம்.
- **கும்பம்** மனச்சோர்வு, தொழில் சிந்தை, முயற்சி தாமதம், பணவிரயம்.
- **மீனம்** எதிர்பாராத நன்மை, வேலைச்சுமை, காரியதாமதம், உறவினர் சந்திப்பு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறைப் பணிமனையில் சுமார் 2 மணிநேரம் இச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பெறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோர் கலந்து கொண்டனர்.கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர் 22பேரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில வடக்கு-கிழக்குப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படட, மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப்பணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அத்துடன், தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சு வாாத்தைகளின் சமகால நிலைப்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது. (ச-8)

# வர்த்தக சலுகைகளை வழங்குக! இலங்கை அமெரிக்காவிடம் கோரிக்கை

(வோஷிங்டன்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வழமை நிலைக்கு கொண்டு வர வர்த்தக சலுகைகளை இலங்கைக்கு வழங்க வேண்டும் என அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சுபசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.


நேற்று முன்தினம் வோஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்க வர்த்தக சபையின் மாநாட்டிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தைதத ஆடைகள் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை இலங்கை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதாக தூதுவர் அந் நாட்டு வர்த்தக சபையினருக்குத் தெளிவுபடுத்தினார்.

ஏறறுமதித் துறைக்கு வர்த்தக ரீதியிலான நிவாரணங்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் தனியார் துறையினருக்கு பாரிய ஒத்துழைப்பு கிடைக்கும் என சுபசிங்க தெரிவித்தார். (ப-4)

# ...பாச்சி

## ...விமர்சனம்



...ரிவா பட்டறை
...வகிரி. அவனின்

...ள்ளைக்குத் தங்
...ாடுத்து அவளு
...வருகிறான்.
...ண் எதிரில் ரவுடிகள் அட்டகாசம் நடக்
...தனர் வசிகசும் காலனியில் விபசார விடுதி
...தம் அய்யரின் கையை முறிக்கின்றனர்.
...டாசுகளைக் கொளுத்திப்போட்டு கொல்ல
...ற்றுகிறான்.
... ஆத்திரப்படும் சிவகிரியை மாப்பிள்ளை
...னுப்புகிறான். நண்பன் கண்ணப்பனுக்கு
... கிடைக்க அவனை வழியனுப்ப மண்டும்
...ர திருப்பம் ஏற்படுகிறது.
...ச் சென்ற நண்பனுக்கும், ரவுடிகளுக்கும்
... தாதா சனியன் சகடையால் கொல்லப்
...நண்ப... பிண...டன் ஊருக்குத் திரும்பும்
...திருப்ப,ரில் வேலைக்குச் செல்வதாக பெற்
...ல்லிவிட்டு மண்டும சென்னைக்கு விஜயம்

...ஸ்பெக்டராக இருக்கும் நண்பர் உதவி
...பட்டியலை சேகரித்துக் களையெடுக்க
...ன். ரவுடிகள் பட்டாசு பாலு, பான்பராக்
...செய்து சனியன் சகடையை அழிப்பது

... விஜய்க்கு இன்னொரு 'கில்லி'. காமெடி,
...ுள்ளார். தங்கை சடையைவிட நளமான
...ின் கூந்தலைக் கத்தரிக்கச்சென்று தவ
...ன் கூந்தலை வெட்டிவருவது... பக்கத்
..., கோழிகளைக் கோவிலுக்குப் பலியிடுவ
... தானே பலிக்கடாவாய் மாட்டிக்கொண்டு
...யைப் பெண்பார்க்க வருபவனைத் தப்பாக
... எடுப்பது... என காமெடியிலும் கலக்க
...ுள்ளார் விஜய்.
...துணையாக இருக்கும் இன்ஸ்பெக்டரை
...முகத்தில் சந்தனம், குங்குமம் ப,சிக்
...ய்ப்பது ஆங்கிலப் படத்திற்கு இணை

... மகளைக் கடத்திய பட்டாசுபாலு கோட்
...நுழைந்து அழிப்பது... பான்பராக் ரவியை
...சென்று சாகடிப்பது திகிலாகவுள்ளது.
...யுடன் நடக்கும் கிளைமாக்ஸ் சண்டை
...வுபடுத்தும் வகை. தரிஷா சிறிதுநேரமே
... ச... ஆட்டம்... விஜய்யை வாடா
...து ...ாமெடி.
...ப்பனாக வந்து ரவுடிகளால் கொல்லப்
...திரத்தில் பெஞ்சமின் மனதில் நிற்கிறார்.
...ல்லிகா பாசமுள்ள தங்கையாக ஒளிர்
...ண் சாயலில் கச்சிதம். சனியன் சகடை
... சனிவாசராவ், பட்டாசுபாலுவாக வரும்
...வில்லன்கள்.
...ாட்டுக்கு வந்து மனசுகளை ஆட்டி விட்
...ஸ்டன், வையாபுரி, யுகேந்திரன், மனோஜ்,
...பலர் நடிக்கின்றனர். குடும்பம், காதல்,
...க் கலந்து படத்தை விறுவிறுப்பாக்கி
... பேரரசு. தினா இசையில் பாடல்கள்
... ரகம். எஸ்.சரவணனின் கமரா ,கதை
...ுகிறது.

*...ி... விறுவிறுப்பான படம்.*




# விக்னேஷ் நடிக்கும் 'சாணக்கிய வம்சம்'

அரசன் சினி இன்டர்நேஷனல் சார்பில் தயாரிக்கும் படம் 'சாணக்கிய வம்சம்'. இப்படத்தின் திரைக்கதை, இயக்கம் ஆகிய பொறுப்புக்களை ஸ்ரீபிரகாஷ் ஏற்றிருக்கிறார்.


முக்கிய கதாபாத்திரங்களில் விகனேஸ், அனுஷா, திலகன், ராஜன், பி.தேவ், பிரியாராமன், கலாபவன் மணி, விஜயராகவன், சுகுமாரி ஆகியோருடன் இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் கேரளாவும் நடித்திருக்கிறது.

இப்படத்தின் வசனம், பாடல்களை கவிஞர் ரவீந்தர் எழுதியுள்ளார். எஸ்.பி.வெங்கடேஷ் இசையமைத்துள்ளார்.

இளைஞர்களைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிக் காட்சிகள், நெஞ்சை நெகழ வைத்து மனதைத் தொடும் உருக்கமான காட்சிகள், அக்கிரமங்கள் நடக்கும்போது எரிமலையாய் வெடித்து நேர்மையான பொலிஸ் அதிகாரியாய் நடிக்கும் திலகனின் அருமையான நடிப் பாற்றல், பிரமிப்பூட்டும் ஆக்ரோஷமான அதிரடி சண்டைக் காட்சிகளும், இனிமையான இரண்டு பாடல் காட்சிகளும் கலந்து காட்சிககு காட்சி விறுவிறுப்பாகச் செலலும் கதையும் அனைத்து தரப்பினரையும் கவரும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது 'சாணக்கிய வம்சம்'.



'மும்பை எக்ஸ்பிரஸ்'
கமல் - மனிசா கொய்ராலா



# நதியாவின் ஆசை

'லண்டனில் பாங் ஒன்றில் வேலை பார்க்கிறேன். கணவர் குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்திட்டு இருக்கேன். விடுமுறையில இங்கே வந்து விடுகிறேன்.



'ராஜகுமாரன்' படத்துக்குப் பிறகு பத்து வருட இடைவெளிக்குப் பின் 'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி' யில் நடித்தேன்.

லண்டனில் உள்ள சவுத் ஹால் பகுதியில் தமிழ்ப் படங்கள் ரிலீஸ் ஆகும். அங்கு போய் படம் பார்ப்பேன். சமீபத்தில் 'அன்பே சிவம்', 'பேரழகன்', 'ஆயுத எழுத்து', '7ஜி ரெயின்போ காலனி' ஆகிய படங்களைப் பார்த்தேன். பிடித்திருந்தது.

இப்போதைய நடிகைகளில் சிம்ரன், ஜோதிகா, சிநேகா ஆகியோர் என்னைக் கவர்ந்தவர்கள். நான் நகரத்துக் கதைகளில்தான் நடித்துள்ளேன். முழுக்க முழுக்க கிராமத்துப் பெண்ணாக ஒரு கரக்டரில் நடிக்க ஆசை' என்றார் நதியா.

தெலுங்கு நடிகர் 'தருண்'னுடன் அதிக நேரம் போனில பேசுகிறாராம் நடிகை திரிஷா. விரைவிலேயே இவர்களது திருமணம நடக்கலாம் என்று கோலிவுட் வட்டாரத்தில் கிசு கிசுக்கப்படுகிறது.

☺ ☺ ☺

தெலுங்கில் பிரபல ஹீரோவான நிதினுடன் சேர்ந்து 'தைரியம்' என்ற தமிழப் படத்தில் நடித்து வருகிறார் 'காதல் அழிவதில்லை' சார்மி. படத்தில் சார்மி எல்லைதாண்டிய கவர்ச்சி காட்டியுள்ளாராம்.

# இயக்குனரின் வருத்தம்

'சிட்டிசன்' படத்தை இயக்கிய சரவண சுப்பையா அதன்பின் கோடம்பாக்கத்தின் கதவுகளைத் தட்டித் தட்டிச் சோர்ந்து போயிருந்தார். மீண்டும் புதுவாழ்வு கிடைத்திருக்கிறது சுப்பையாவுக்கு.

இவருடைய 'சிட்டிசன்' படம் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பானபோது அதைப்பார்த்த தயாரிப்பாளர் ஒருவர் சரவண சுப்பையாவை அழைத்து,

'எப்பய்யா படம் பண்ணப்போறே?' என்று கேட்டு உரிமையோடு வாய்ப்பளித்தாராம். படத்தின் பெயர் **'ABCD'**.

சினேகா, அபர்ணா, நந்தனா என்று மூன்று ஹீரோயின்கள் இந்த படத்தில்! மூவரையும் ஒரு சேர காதலிக்கிற வேடத்தில் ஷாம்!

இந்தப் படம் வரட்டும், ஷாம் பி அன் சி ஏரியாவையும் ரீச் பண்ணிடுவாரு என்று நம்பிக்கையோடு சொல்கிற சரவண சுப்பையாவுக்கு ஒரு வருத்தம்,

'என்னுடைய சிட்டிசன் படத்திலேதான் ஒரு ஊரே கடலுக்குள் போய்விட்டதாக காட்டியிருந்தேன். நான் படமெடுத்த அதே பூம்புகார், தரங்கம்பாடி பகுதிகளை சுனாமி தாக்கி பலர் அதே மாதிரியே இறந்து போயிருக்கிறார்கள்..

இந்தத் துக்கத்தை என்னவென்று சொல்வது' என்றார் வருத்தத்தோடு!



'சொல்லியடிப்பேன்'
விவேக் - சாயாசிங்

# ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தல் இல்லை என்ற அறிவிப்பு

## ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கின் உச்சம்

## இது ஜனநாயகத்தை கொல்வதற்கு சமனானது என்கிறார் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நாட்டில் அடுத்து வரும் 5



ஆண்டு காலப்பகுதியில் தேர்தல்கள் நடாத்தப்படமாட்டாது என ஜனாதிபதி தெரிவித்த கருத்தினை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமாகிய ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி தெரிவித்த கருத்தானது ஏற்றுக்கொள்ளமுடியாதது. சுனாமி பேரலை காரணமாக நாட்டின் அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படுகின்ற வேளையில் ஜனாதிபதி தனிப்பட்ட கட்சி அரசியலை முன்னிலைப்படுத்திய சம்பவமானது துரதிஷ்டவசமானது.

சுனாமி பேரலை காரணமாக சுமார் 40 ஆயிரம் பேர்வரை உயிரிழந்துள்ளார்கள். இந்த நிலையில் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டியது ஜனாதிபதியின் கடமையாகும்.


ஜனநாயகம் உயிர்வாழவேண்டுமாயின் நாட்டில் தேர்தல்கள் நடாத்தப்படவேண்டும் என்பது அவசியமாகும். எனினும் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சர்வதிகாரப் போக்கையே வெளிக்காட்டுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜி.எல்.பீரிஸின் கருத்தை விமர்சிக்கும் பிரதியமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே, ஜனாதிபதி நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் தெரிவித்த கருத்து எவ்வித கட்சி அரசியலையும அடிப்படையாகக் கொண்டதல்ல. நாடு அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும் என்பதற்காகவே அவர் அந்தக்கருத்தை வெளியிட்டார்.

எனினும், ஜி.எல்.பீரிஸ் எப்போதும் பதவியை விரும்புகின்றவர் என்ற வகையில் அதனை விமர்சித்திருக்கின்றார்.

அந்நிகழ்வில் ஜனாதிபதிக்கு முன்னர் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதியின் தலைமையில் சுனாமிப் பேரலையின் தாக்கத்துக்கு உள்ளான மக்களை மீட்டெடுப்போம் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பீரிஸின்



கருத்து ஆபத்தானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ரவி.எம்.பி.போளை வழங்கினார்

(தென்மராட்சி)

சுனாமி பேரழிவினால் பதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுபபினர் நடராஜா ரவிராஜ் 10 ஆயிரம மாபிள்களை அண்மையில் வழங்கி வைத்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவில் இருந்து அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தமிழ் அன்பர் ஒருவர் கிழக்கு மாகாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் இருக்கும் சிறுவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட சொக்கிளேற்றுக்களையும் வடபகுதியில் இருக்கும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சொக்கிளேற்றுக்களையும் வழங்கியுள்ளார்.

அமெரிக்காவில் இருக்கும் சிறுவர்களின் அன்பளிப்பு நிதியில் இருந்தே 75 ஆயிரம் ரூபாவுக்கும் சொக்கிளேற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. (ப-16)

### திடீர் சோதனை

(துன்னாலை)

தமிழீழ விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினரின் குழு ஒன்று வடமராட்சிப் பகுதிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டு பொருட்களின் விலைகளை மேற்பார்வை செய்து வருவதுடன், விலைப்பட்டியல் கட்டாயமாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகிறது. (ப-101)

## நாட்டை மீளக்கட்டியெழுப்ப புலிகள் ஒத்துழைப்புத் தருவார்கள்

### அமைச்சர் டியூ குணசேகரா நம்பிக்கை

(கொழும்பு)

சகல கட்சிகளும் ஒன்றிணைந்து கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவும் நாட்டை மீளககட்டியெழுப்ப முன்வரவேணடும் என அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனபபிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் அரசு மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் செயற்படுகின்றது.

சகல இன மக்களும் ஒற்றுமையாக எமது நாட்டில் வாழவேண்டும்.

எமது நாடு சிறிய நாடாக இருந்தாலும் நல்ல வளம் இங்கு உள்ளது. இதனால் அபிவிருத்திகளை மேற்கொண்டு எமது நாட்டை மீண்டும அழகிய நாடாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

இதற்கு சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம். சகல கட்சிகளும் ஒன்றுபடவேண்டுமானால் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

அப்போதுதான் நாட்டையும் அபிவருத்தி செய்யமுடியும். இனப் பிரச்சினைக்கும் இலகுவாகத் தீர்வு காணலாம்.

இதனால்தான் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளது.

நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு தருவார்கள் என அரசு நம்புகிறது. ஆனால் சில அரசியல கட்சிகள் ஒத்துழைப்புத் தரமறுக்கின்றன. இது அரசுக்கு பெரிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் மீண்டும் போரை ஏற்படுததுவதற்கும் இத்தகைய அரசியல் கட்சிகள் சதி செய்கின்றார்கள்.

அரசு ஆயுதம் கொள்வனவு செய்வதாகவும் மீண்டும் போருக்குத் தயாராகி வருவதாகவும் கூறி விடுதலைப் புலிகளை சீண்டி விடுகிறார்கள்.

இத்தகைய நிலைமையை மாற்றி அனைவரும் நாட்டுக்காக பாடுபட முன்வரவேண்டும். இதுவே அரசின் வேண்டுகோளும் விருப்பமுமாகும் என்றார். (க-60)

## வீதி புனரமைப்பில் கூட அரசாங்கம் பக்கச்சார்பு

### ரவிராஜ் எம்.பி. விசனம்

(திருநெல்வேலி)

சுனாமியால் சேதமடைந்த வீதிகளை தென்பகுதியில் துரிதமாகத் திருத்தி வரும் அரசாங்கம் வடபகுதியில் சுனாமியால் பாதிப்படைந்த வீதிகளைத் திருத்த முன்வராமல் இழுத்தடித்து வருகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் விசனம் தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிப்படைந்த வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவுப் பகுதி வீதிகளை திருத்த அரசாங்கம் உடனடியாக நிதி ஒதுக்கீட்டினை செய்யவேண்டும்.

அத்துடன், வடபகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதும் பாடசாலைகளிலேயே தங்கி உள்ளனர். ஆனால், அம்



பாந்தோட்டையில் உள்ள மக்களுக்கு சகல வசதிகளுடனும் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு நிரந்தர வீட்டிற்கான அடிக்கல்லினையும் ஜனாதிபதி நாட்டியுள்ளார் எனவும் ரவிராஜ் எம்.பி. மேலுமசுட்டிக்காட்டினார். (ந-43)

## பதிவு செய்யப்படாத மருந்துகள் சுகாதார அமைச்சில் தேக்கம்

(கொழும்பு)

சுனாமி பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விநியோகிப்பதற்கென வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பெருந்தொகையான பதிவு செய்யப்படாத மருந்துகளும் தடுப்பு ஊசிகளும் சுகாதார அமைச்சில் தேக்கி வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவுத் தலைவர் நிஹால் அபயசிங்க கூறினார்.

சுகாதார கல்விப் பணியகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலிருந்து ஏராளமான மருந்துகளும், தடுப்பூசிகளும் இலங்கைக்கு வந்து குவிந்த வண்ணமுள்ளன. ஆனால் அவை விநியோகிக்கப்படாமல் பயன்படுத்தப்படாமல் சுகாதார அமைச்சில் தேக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மருந்துகளும், தடுப்பூசிகளும் பதிவு செய்யப்படாதவையாகும். நாம் பதிவு செய்யப்பட்ட மருந்து வகைகளையே இங்கு பயன்படுத்தி வருகிறோம்.

பதிவு செய்யப்படாத மருந்துகளை பாவனைக்குட்படுத்துவதில்லை. இந்த மருந்து வகைகள் எமக்கு உபயோகப்படாதவிடத்து அவற்றை வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்போம்.

சுகாதார அமைச்சின் சேவையில் எவ்வித குறைபாடுகளும் இல்லை. பாதிக்கப்பட்ட இடங்களில் சுகாதார சேவைகள் சீராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிககப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுககு மலேரியா காய்ச்சலோ டெங்குக் காய்ச்சலோ ஏற்பட்டதற்கான பதிவுகளெதுவும் இதுவரை இல்லை.

கிழக்கு மாகாணத்தின் சில முகாம்களில் மட்டும் சின்னமுத்து, அம்மை நோய் என்பவற்றால் சிலர் பீடிக்கப்பட்டுள்ளனர்.அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது என்றார். (க-9)

## சிசுசவிய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது

(கொழும்பு)

நாட்டில் அரச பாடசாலைகளில் கல்வி கற்று வரும் வறிய மாணவர்களின் கல்வி நிலையைமேம்படுத்தும் பொருட்டு கல்வி அமைச்சு சிசுசவிய புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாக அமைச்சின் இத்திட்டத்திற்கு பொறுப்பான திட்டப்பணிப்பாளர் அனுர திஸநாயக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் பாடசாலைகளில் கல்வி கற்கும் பொருத்த மானவர்களைத் தெரிவு செய்து இம் மாதம் 24 ஆம் திகதிக்கு முனனர் கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

24 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருடாந்த வருமானத்தைப் பெறும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரம் மாணவர்கள் இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் நன்மையடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இடைநிலைக் கல்வியை நவீன மயப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் வருமானம் குறைந்த மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதற்கு வசதியாக தெரிவு செய்யப்படும் மாணவர்கள் ஒருவருககு வருடாந்தம் 5 ஆயிரம ரூபா வழங்கப்பட உள்ளதாக திட்டப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கஷ்டப் பிரதேச மாவட்டங்கள் 12 இல் இருந்து 65 வீதமான மாணவர்களும் ஏனைய 13 மாவட்டங்களில் இருந்த 35 வீதமான மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு இப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## சுனாமியால் சேதமடைந்த ஆலயங்களின் விபரம் திரட்டப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களது விபரங்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

சுனாமி அனர்த்தத்தினால் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆலயங்களின் விபரங்களையும் அவ்ஆலயங்களின் சேத விபரங்கள் பற்றிய மதிப்பீடுகளையும் திரட்டி தமக்கு அனுப்பும் படி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதன் யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு அறிவித்துள்ளது. (ந-19)

# அமெரிக்காவின் நயவஞ்சகம்

சுனாமி ஏற்படப் போவது பற்றித் தெரிந்திருந்தும் பாதிப்புக்குட்படப்போகும் நாடுகளுக்கும் மக்களுக்கும் அறிவிக்காது அமெரிக்க ஏகாதிபத்தியம் நயவஞ்சகம் செய்துள்ளது.



சுனாமி அலைகள் பற்றிய முன்னெச்சரிக்கை நிலையங்கள் ஐக்கிய அமெரிக்காவின் ஹவாய், அலாஸ்கா மாநிலங்களில் இருக்கின்றன. அம்மாநிலங்கள்



சுனாமி அலை அபாயத்திற்குட்பட்ட பிரதேசங்களாகும்.

தேசிய சமுத்திர சமயோசித நிர்வாகம் (NOAA) என்ற நிறுவனம் கடந்த 26 ஆம் திகதி அதிகாலையில் இந்தோனேஷியத் தீவுகளில் ஒன்றான சுமாத்திரா தீவுக்கடலில் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்த அலை பற்றியும், அது இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கும் பரவும் என்பதையும் முன்னறிந்திருந்தும் அதுபற்றி இந்தோனேஷியாவிற்கோ, இந்து சமுத்திர நாடுகளுக்கோ அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தால் பாரிய உயிர்ச்சேதங்களைப் பெருமளவு தவிர்த்திருக்க முடியும்.

ஆனால், அனர்த்தங்கள் ஏற்பட்டு இந்து சமுத்திரப் பிராந்தியமே பிணக்காடுகளாக மாறிய பிறகு NOAA நிறுவனம் சுனாமி அலை பற்றி இந்தோனேஷிய அதிகாரிகளுக்கு மின்அஞ்சல் மூலம் செய்தியை அனுப்பியிருந்ததாகக் கூறி பாசாங்கு பண்ணுகிறது.

தியாகோ கார்சியா தீவிலுள்ள அமெரிக்கக் கடற்படைத் தளத்திற்கு உரிய நேரத்தில் அறிவித்திருந்தபடியால் அக்கடற்படைத் தளத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. அவ்வறிவிப்பை அமெரிக்கக் கடற்படைத் தள அதிகாரிகள் தியாகோகார்சியா தீவிலுள்ள மக்களுக்கு அறிவிக்கவில்லை.


அதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் அங்கு பலியாயினர்.

ஆக அமெரிக்க ஏகாதிபத்தியமும் பாதிப்பிற்குட்பட்ட நாடுகளுக்கு முன்னெசசரிக்கை செய்யவில்லை என்பது மட்டுமன்றி அதன் கடற்படைத் தளத்தை வைத்திருக்கும் தியாகோகார்சியா தீவு மக்களுக்கும் முன்னெச்சரிக்கை செய்யவில்லை.

சுனாமி அலை பற்றி முன்னறியும் வசதிகள் அமெரிக்காவிடமே இருக்கின்றன. இருந்தும் அதைப் பற்றி அறிவிக்காமல் அதற்குரிய ஏகாதிபத்திய நயவஞ்சகத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தோனேஷிய, சுமாத்திரா தீவுப்பகுதி சுனாமி அலையின் ஆபத்திற்குட்பட்ட பகுதியென்றும் அங்கு முன்னறியும் நிலையங்களை அமைக்க வேண்டியது அவசியம் என்று கூறப்பட்டபோதும் அதனை அமைக்க போதிய நிதியில்லாததால் அவை அமைக்கப்படவில்லை.

சுனாமி முன்னறியும் நிலையமொன்றை அமைக்க 250,000 அமெரிக்க டொலர்கள் தேவை. அமெரிக்க பாதுகாப்பு இராணுவத் தலைமையகமான பென்டகனின் ஒரு நாள் செலவு 1500,000000 அமெரிக்க டொலர்களாகும். அதாவது அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகம் ஒரு செக்கனுக்குக் குறைவான நேரத்திற்கு செலவிடும் பணத்தில் ஒரு




சுனாமி அலையை முன்னறியும் நிலையத்தை அமைக்கலாம். அவ்வாறு ஒரு நிலையம் இந்து சமுத்திரப் பகுதியில் எங்காவது அமைக்கப்பட்டிருந்தால் அழிவுக்குள்ளான பல்லாயிரக் கணக்கான மனித உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும்.

அவ்வாறு அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதற்கு பணம் செலவழித்து அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பழக்கமில்லை. இருப்பினும் முன்னறிந்த தகவலைக் கூட உரிய நேரத்தில் உரிய முறையில் இந்து சமுத்திர நாடுகளுக்கு கொடுக்கவில்லை. இது ஏன்? என்பது தான் தற்போது எழுப்பப்படும் கேள்வியாகும். இதன் மூலம் மனித குலத்திற்கே பாரிய நயவஞ்சகத்தையும துரோகத்தையும் அழிவையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்துள்ளது. இதனை மனிதநேயத்தை நேசிக்கும் எவராலும் மன்னிக்க முடியாது.

அழிவிலும் தென்னாசியாவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவே அமெரிக்க ஏகாதிபத்தியம் கங்கணம் கட்டி நிற்கிறது. அதனை மேற்படி சம்பவம் அம்பலப்படுத்தி நிற்கிறது.

நன்றி :- புதிய பூமி




## வாகன விபத்து

(பொலநறுவை)

பொலநறுவையில் இருந்து வாழைச்சேனை நோக்கிச்சென்ற இரண்டு வாகனங்களும், வாழைச்சேனையில் இருந்து கொழும்பை நோக்கிச் சென்ற இரண்டு பாரவூர்திகளும் ஒன்றுடன் ஒன்று தொடராக வாழைச்சேனையில் மோதிக் கொண்டன.

இந்தத் தொடர் விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டதோடு 8 பேர் படுகாயங்களுக்குள்ளாகி மட்டக்களபபு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## பௌர்ணமி தின பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதலும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கைதடி கண்டி வீதி உக்கனை ஸ்ரீ விநாயகப் பெருமான் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை குளங்கரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்திலும் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் பன்னிரு திருமுறை பாராயணம் நடைபெறவுள்ளது.

நிறைவில் மகேஸ்வர பூசையும நடைபெறும். (க)

## மூவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

நிட்டம்புவ வத்துப்பிட்டிவல பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தல் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

இப்பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட முனைந்தவேளை பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த குழுவொன்று அவர்கள் மீது கைக்குண்டு வீசுவதற்குத் தயாராக இருந்தது. அவ்வேளையிலேயே இந்த துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக வத்துப்பிட்டிவல வைததியசாலை பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## விபரம் சேகரிப்பு

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்தில் நலன்புரி நன்மைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிதித்திட்டமிடல் அமைச்சு நலன்புரி நன்மைச் சபையுடன் இணைந்து கணக்கெடுப்பாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் விபரங்களைத் திரட்டி வருகின்றது.

இத்தகைய புள்ளி விபரங்கள் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு 2005 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி நன்மை உதவிகளை வழங்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இத்தகைய விபரங்கள் திரட்டும் நடவடிக்கை வலி.மேற்குப் பிரதேசத்தில் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (ப-49)

## அத்தியாவசியப் பொருட்கள் இன்று முதல் நியாய விலையில்

(கொழும்பு)

அரிசி, கோதுமை மா, உருளைக் கிழங்கு உட்பட பல அத்தியாவசியப் பொருட்களை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது.

இதனால் இப்பொருட்களை இன்று முதல் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியுமென நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் இன்று முதல் இப்பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன்படி இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்மதி அரிசியன் மொத்த விலை கிலோ 44.00 ரூபாவாகவும், சில்லறை விலை 45.00 ரூபாவாகவும், இருக்கும். பொன்னி அரிசியின் மொத்த விலை 33.50 சில்லறை விலை 35.00, நாட்டரிசி மொத்த விலை 30.50 சில்லறை விலை 33.00 ரூபா.

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோவின் மொத்தவிலை 45.00, சில்லறை விலை 50.00, பெரிய வெங்காயம் மொத்தவிலை 34.00, சில்லறை விலை 40.00 கோதுமை மாவின் மொத்தவிலை 26.00 சில்லறை விலை 27.00 ரூபாவாகவும் விற்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது. (க-9)

## அடையாள அட்டைகளை இழந்தோர் உறுதிப்படுத்தல் கடிதங்களுடன் வருக

### பொதுமக்களுக்கு படையினர் அறிவிப்பு

(ஓமந்தை)

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டு தமது ஆள் அடையாள ஆவணங்களை இழந்தவர்கள் ஓமந்தை சோதனைச்சாவடி ஊடாக பிரயாணம் செய்யும் போது தமது ஆள்அடையாளங்களை உறுதிசெய்யும் கடிதம் ஒன்றினை உரிய அரச அதிகாரிகளிடம் பெற்றுவருமாறு ஓமந்தை சோதனைச் சாவடி இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமது அடையாள அட்டைகள் உட்பட சகலதையும் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பாதிக்கப்பட்டவர்களுடன், பாதிப்படையாதவர்களும் அடையாள அட்டையின்றி பயணம செய்ய முயற்சிப்பது அறியப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டவர்களை இலகுவாக இனங்கண்டு உதவி புரிவதற்காக பாதிப்புக் குறித்த பரிந்துரைக் கடிதம் ஒன்றை எடுத்துவருமாறு படைத்தரப்பு அறிவித்துள்ளது. (ப-4)

## பிற்போடப்பட்டது

(பொன்னாலை)

பெப்ரவரி மாதம் நடைபெறவிருந்த நான்காவது தமிழீழத் தேசிய விளையாட்டு விழா கடற்கொந்தளிப்பு அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது என தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா அறிவித்துள்ளார்.

இவ்விளையாட்டு விழா, எதிர்வரும் யூலை மாதம் இரண்டாவது வாரத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ப-49)

## தகவல்களை திரட்டும் பணியில் வெ.வேலைவாய்ப்புப் பணியகம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் உறவினர்கள் கடல் அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனரா? எனும் தகவல்களை திரட்டும் பணிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் உறவினர்கள் இறந்திருப்பின் அவர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவை வழங்கும் பொருட்டே இவ்வாறு தகவல்கள் திரட்டப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கருணாசேன ஹெட்டியாராச்சியன் பணிப்பின் பேரில் இத்தகவல்கள் திரட்டப்படுகின்றன. (க)

# மீள்பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

46

தமக்கு முன்னர் சொல்லப்பட்ட அந்நூலின் கூற்றை இவர் மறுக்கவும் சான்று காட்டவில்லை நிறுவவும் சான்றுகாட்டவில்லை ஆதலான் என்க. இவரின் நூற்படைப்பால் பயில்வார் வைபவமாலையில் நம்பிக்கை கொள்ள இடர் விளைகிறது. இவ் வைபவ விமர்சனக்காரரின் முடிபுகளை, பிழைகளை இந்நூலின் வெவ்வேறு இடங்களில் காணலாம் பின் நூல் எழுதுபவர் முன்னோர் உரைத்ததற்கு மாறாகச் சான்றில்லாமல் ஏன் எழுதவேண்டும். அம்முன்னோர் உரையைச் சான்றும் காட்டி மறுத்ததன்றோ புது முடிபைச் சொல்ல வேண்டும். சான்றில்லா தவற்றை உண்மை உள்ள கூற்றென்று நம்புவதெப்படி? வைபவமாலையில் சொல்லப்பட்ட அனைத்துப் பொருளுக்கும் இவர் மறுப்புக் கொடுப்பதாலும் ஒன்றுக்கும் ஆதாரம் காட்டாமல் சொல்வதாலும் இவர் உண்மைகளை அத்தாட்சிப்படுத்தாமல் சொல்வதாலும் இவர் கூற்றுக்கள் உண்மைக்குறுதியானவை என்று எம்மால் நம்பமுடியாமல் இருக்கிறது.

## 38.கோட்டை அரசன் செண்பகப்பெருமாளின் வரலாறும் யாழ்ப்பாணத் தொடர்பும்

இவன் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்புப் புத்திரன். இவனை யாழ்ப்பாண இராச்சியத்தைச் ஜெயித்து வருமாறு அப் பராக்கிரமபாகு அனுப்பி வைத்தான். செண்பகப்பெருமாள் படை எடுப்பு கி.பி.1450ல் நல்லூரில் கனகசூரியன் ஆட்சிசெய்யும் போது நடந்தது. இப்படை எடுப்பில் கனகசூரியன் தோல்வி பெற்று இரவிலே மனைவி மக்களைக் கூட்டிக் கொண்டு வட தேசத்துக்கோடிப் போய்விட்டான். இவ்விடத்தில் யாழ் வைபவமாலை சொல்வதாவது "விஜயவாகு என்னும் சிங்களவன் தானேயரசனெனத் தலையிட்டு தமிழ்க் குடிகளையொடுக்கித் தமிழரை உடை நடை பாவனையிலெல்லாம் தங்களைப் போலாக வேண்டும் என்று பலவந்தம் பண்ணி மாறுதல் பண்ணுவித்து அதற்கமையாதவர்களைத் தண்டித்தும் பதினேழு வருடம் அரசாண்டான்" "கனகசூரிய சிங்கையாரியன் தன் பிள்ளைகளாகிய பரராசசேகரனையும் செகராசசேகரனையும் திருக்கோவலூரில் இராச குடும்பத்தார்பால் கல்வி பயில வைத்துக் காசிபரியந்தம் யாத்திரை பண்ணி திரும்பிக் திருக்கோவிலூருக்குப் போய் அங்கே தன் பிள்ளைகள் வளர்ந்தவர்களாய்ப் போர்ச் சாமர்த்தியத்திலும் கல்விப் பயிற்சியிலும் சரீர வழக்கிலும் அதிகப்பட்டவர்களாய் இருக்கக் கண்டு அளவில்லாத சந்தோசமானான். பிதாவைக் கண்டபோதே பிள்ளைகளின் முகம் சூரியனைக் கண்ட தாமரைப்புஷ்பங்கள் போலாயின. பிள்ளைகள் இருவரும் சத்துருவைச் ஜெயிக்கவும் இராச்சியத்தை மீட்டுக் கொள்ளவும் பண்ணியிருந்த பிரயத்தனங் கண்டு மிகுந்த ஆச்சரியங்கொண்டு அவர்களை முத்தமிட்டு அங்குள்ள இராசகுடும்பத்தார்க்குத் தான் காட்ட வேண்டிய நன்றியறிதல் எல்லாம் காண்பித்து பிள்ளைகளையும் தேவியையுங் கூட்டிக்கொண்டு மதுரைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே சேர்ந்த பொழுது பாண்டிநாட்டைப் பகுதிகளாக ஆண்ட சிற்றரசர்கள் பலரும் சேனைகளையும் ஆயுதங்களையும் கொடுத்துவிட அவன் சகல ஆயுதங்களுடனேயும் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து மேற்குவாசல் விழியாக நுழைந்தான்.

விஜயவாகு காத்திராத வேளையிற் சேனை வர்க்கத்துடன் கனகசூரிய சிங்கையாரியன் நுழைந்த போதிலும் அவன் சடுதியிற் சேனைகளைக் கூட்டி அஞ்சா நெஞ்சனாய் நின்று பெருஞ்சண்டை பண்ணினான். செகராசசேகரன் ஓர் அரண் மேற் சண்டை செய்து நிற்கப் பரராசசேகரன் விஜயவாகுவின் துணிவையும் அவன் செய்யும் வீரத்தையுங் கண்டு வாட்படையுடனே விஜயவாகுவின் போர்முனையிற் சிங்கம் பாய்ந்தாற்போல் பாய்ந்து சேனைகளையும் விஜயவாகுவையும் தன் வாளுக்கிரையாக்கினான். அதைக் கண்டு செகராசசேகரனுடன் எதிர்த்த போர்முனை முறிந்து கெட்டுச் சிதறிப் போயிற்று. பரராசசேகரன் பிதாவை அரசாட்சியில் வைத்துத் தான் தேச விசாரணை செய்ய முயன்றான். பிதாவாகிய கனகசூரியன் பரராசசேகரனை முடிசூட்டிச் சிங்காசனத்தில் வைத்துத்தான் இளைப்பாறியிருந்து சில காலத்தின் பின் இறந்து போனான். யா.வை.மா.பக்-44-48

இவை நிற்க, செண்பகப்பெருமாளைப் பற்றி பிறர் கூறுவதாவது, "செண்பகப்பெருமாள் தலைநகருட் புகுந்து மதங் கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று அந்நகர் ஆவணங்களிலெல்லாம் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரில் விளங்கிய மாடமாளிகைகளெல்லாம் இடித்துத் தரைமட்டம் ஆக்கினான், பின் அனேகவதிகாரிகளைச் சிறைப்படுத்தி அவர்களுடன் ஜெயவர்த்தன கோட்டைக்கு மீண்டான்" பராக்கிரமபாகு களிப்பால் ஆரியவேட்டை ஆடும் பெருமான் எனப் புகழ்ந்து யாழ்ப்பாணத்தையே அரசு புரியுமாறு அனுப்பினான்.

செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணம் போய்ப் பழைய தலைநகரம் பாழாய்விட்டமையால் நல்லூரில் கி.பி.1450ல் ஒரு புது நகரமெடுப்பித்துச் சிறீ சங்கபோதி புவனேகவாகு என்னும் சிங்கள நாமத்தோடு பதினேழு வருடங்களாக அரசு செய்து வந்தான். இவன் யாழ்ப்பாணத்தை வென்ற புகழ் சிங்கள நாடெங்கும் பரவிப் பேரானந்தத்தை விளைவித்து, இவ்வெற்றியைப் புகழ்ந்து கோகில சந்தேசவென்னும் குயிற்றூதுப் பிரபந்தம் ஒன்று தங்காலைக் கணித்தான மூல்கிரிகலவென்னும் விகாரையில் இருந்த பெரும் புகழ் படைத்த சிங்களப் புலவர் ஒருவராற் பாடப்பட்டது" (செ.இ.யா.பக்.ச.74.75)

செண்பகப்பெருமாள் கோட்டை இராட்சியத்துக்கு அரசனான பிறகு தான் ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு என அழைக்கப்பட்டான். ஆகையால் நல்லூரில் உண்டான கட்டியத்தில் அப்பெயர் வரக் காரணம் இல்லை. சம்புமால், செண்பகப்பெருமாள், இராசகுமரேந்திரன் என்ற பெயர்கள் வந்திருக்க வேண்டும். அவை வரவில்லை. கட்டியத்தில் ஸ்ரீசங்கபோதிப் பெயர் வருவதால் அவன் கோட்டைக்கரசனான பிறகு கட்டினான் என்போமானால் இங்கே அவனுக்கு நாடுமில்லை, ஆட்சியுமில்லை. இங்கே கனகசூரியன் ஆட்சிக்கு வந்துவிட்டான். ஆகையால் செண்பகப்பெருமாள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டவில்லை என்பதுதான் எம்முடிபு. செண்பகப்பெருமாள் ஆட்சியைப் பற்றி வைபவமாலை குறிப்பிடும் பொழுது "விஜயவாகு (செண்பகப்பெருமாளின் இராசப் பிரதிநிதி)வென்னுஞ் சிங்களவன் தானேயரசனெனத் தலைப்பட்டுத் தமிழ்க் குடிகளையொடுக்கித் தமிழரையுடை நடை பாவனைகளால் தங்களைப் போலாக வேண்டுமென்று பலவந்தம் பண்ணி மாறுதல் பண்ணுவித்து அதற்கமைய யாதவர்களைத் தண்டித்துப் பதினேழு வருடம் அரசாண்டான்.

(யா.வை.மா.பக்.45.46)

இந்த வகையிலே அரசாண்டவன் கந்தசுவாமி கோயில் கட்டுவானா? அல்லாமலும் புத்த சமயப்பட்டமான ஸ்ரீசங்கபோதிப் பட்டம் பெற்ற அரசன் கட்டுவானா? நிச்சயமாக அவன் கட்டமாட்டான் நிற்க. இவ்வுண்மையை நிறுவ பெரிதும் வைரமான சான்று அக்கட்டியத்திலே கீழ் அடியிலே சொல்லப்படுவது அதாவது சூரியகுல வம்சோத்பவ... புவனேகவாகு எனச் சொல்லப்பட்டிருப்பது இது அமைச்சர் புவனேகவாகு எனச் சொல்லப்பட்டிருப்பது இது அமைச்சர் புவனேகவாகுவையே வரைந்து குறிக்கும். எனவே அக்கோயில் கட்டியவன் அமைச்சர் புவனேகவாகுவென்க. அன்றியும் செண்பகப்பெருமாள் சூரியகுல வம்சத்தவனா? இல்லையே இவை நிற்க.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள கடனுதவிகளை மீள செலுத்துவதற்கான கால எல்லையை நீடித்துள்ளது.

அத்துடன் இவ்வாண்டில் இலங்கை செலுத்த வேண்டிய நிதியில் 114 மில்லியன் அமெரிக்க டொலர்கள் குறைக்கப்பட்டுள்ளன. (க-9)

## காந்தீயம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினரினால் வெளியிடப்படும் "காந்தீயம்" சஞ்சிகை மலர் இதழ்I ஐப்பசி 2ஆம் திகதி வெளியாகியுள்ளது.

இம் மலரின் 2 ஆம் இதழ் எதிர் வரும் 30 ஆம் திகதி வெளியாகும்.

எனவே இம் மலரினை பெற விரும்புவோர் சோ.க.தம்பிப்பிள்ளை, வேதாந்தமடம், குமாரசாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்: (க-9)

## குடிநீர் விநியோகம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரை இலவசமாக வழங்க மலேசியாவைச் சேர்ந்த ஒரு சில கம்பனிகளின் தலைவர்கள் முன்வந்துள்ளனர்.

அத்துடன், நலன்புரிமுகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க மலேசியாவில் இருந்து பாரிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நான்கை இலவசமாக பொருத்தித் தருவதாகவும் இத் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர். (க)

## தப்பியோட்டம்

(துன்னாலை)

விபத்தொன்றில் காயப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செ.சக்திவேல் என்பவர் அனுமதியின்றி மருத்துவமனையின் விடுதியை விட்டு தப்பி ஓடிவிட்டார். இதனால் வைத்தியசாலை நிர்வாகம் நெல்லியடி பொலிஸாரிடம் இதுபற்றி முறைப்பாடு செய்துள்ளது. (ப-101)

## ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தைச் சென்றடையும் கப்பல்களின் பரிமாற்றல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு புதிய ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்தக் குழு மங்கள சமரவீரவின் பணிப்புரையின் பேரில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் குழு அமைப்பது தொடர்பில் நீதி அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் இலங்கைக் கடற்படை ஆகியவற்றின் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ந-9)

## பனைகள்முறிந்தன

(பொலிகண்டி)

கொற்றாவத்தை அயிட்டியப் புலம் எனும் இடத்தில் இரு பனை மரங்கள் மின்சார கம்பி மீது விழுந்து மின்கம்பம் வீதியின் குறுக்கே முறிந்து வீழ்ந்தது.

இதனால் இப் பகுதியில் மின்சாரமும் தடைசெய்யப்பட்டது. (ப-106)

## திறப்பு

(துன்னாலை)

மந்திகை மருத்துவமனையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை வழங்கவென அவசர சிகிச்சைப்பிரிவு கூடம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அதிக அளவிலான வைத்தியர்கள் வந்து குவிவதால் மேற்படி கூடம் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இக்கூடம் அமைக்கப்பட்டதனால் நோயாளிகளுக்கு பெரிதும் நன்மைகிடைத்துள்ளது. (ப-101)

## இரதோற்சவம்

(பொன்னாலை)

காரைநகர்- பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் இன்று இரதோற்சவமும் நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ப-49)

* * *

(பொன்னாலை)

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமிகள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று வரும் மஹோற்சவ தினங்களில் இன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (ப-49)

## கும்பாபிஷேகம்

(பொன்னாலை)

சாவகச்சேரி-கல்வயல் அருள்மிகு வேதவனம் ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா இன்று காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-49)

* * *

(பொன்னாலை)

அராலி வடக்கு-செட்டியார் மடம் மணடையன்திடல் வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 10.05 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (ப-49)

* * *

(பொன்னாலை)

மானிப்பாய் வடக்கு-உச்சியோடை பெரியதம்பிரான் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் பூசையின் பின்னர் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ப-49)

* * *

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மத்தி கந்தசாமி கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ப-29)

## இடமாற்றம்

(தனங்கிளப்பு)

சமுர்த்தி அதிகாரசபையில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்களுக்கான இடமாற்றம் தொடர்பான சுற்றறிக்கைகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இவ்வாண்டே முதலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ப-37)

## அனுப்பி வைப்பு

(துன்னாலை)

சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கென கொழும்பிலிருந்து ஒரு தொகுதி மரக்கறிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. (ப-101)

## வர்ணப்பூச்சு

(துன்னாலை)

ஜேர்மன் கியூமெடிக்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் மந்திகை மருத்துவமனைக் கட்டடங்கள் வர்ணம் பூசப்பட்டு வருகிறது.

பல இலட்சம் ரூபா செலவில் இது இடம்பெற்று வருகின்றது. (ப-101)

## பாலம் சேதம்

கண்டி வீதியில் உள்ள செம்மணிச் சந்திக்கு அருகில் காணப்படும் பாலம் ஒன்று நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. (ப-47)

நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு - குறள்

வலம்புரி

## சமயத்தை இழிவுபடுத்தாமல் குற்றத்தைக் கண்டுபிடிக்கலாம்

சமயம் என்ற பதம் "சமைத்தல்" என்ற வினையடியிலிருந்து உருவானது. சமைப்பது என்பதன் பொருள் உண்பதற்கேற்றவாறு பண்படுத்துதல் என்பதாக அமையும். அதனடிப்படையில் சமயம் மனிதனை வாழ்க்கைக்குரியவனாகப் பண்படுத்துகிறது.

சமயம் பேசுகின்ற தத்துவங்கள், அறக்கருத்துக்கள் யாவுமே மனிதனை வாழ்வியலுக்குரியவானாக்குகின்றன.

சமயத்தைப் பின்பற்றுகின்றவர்களும், அதனைப் போதிக்கின்றவர்களும் விடுகின்ற தவறுகள், இழைக்கின்ற குற்றங்கள் யாவும் சமயத்தின் தவறன்று. மாறாக அதனைப் பின்பற்றுகின்றவர்களின் தனிப்பட்ட தவறாகவோ அன்றி ஒரு குழுமத்தின் தவறாகவோ இருக்க முடியும்.

அதாவது பரீட்சையில் தோற்றுகின்ற மாணவன் ஒருவன் அந்தப் பரீட்சையில் சித்தியடையவில்லை எனின் அதற்குக் காரணம் அந்த மாணவனின் முயற்சியின்மை மற்றும் அக்கறையீனம் என்பதாகவே இருக்கும்.

ஒரு மாணவன் சித்தியடையவில்லை என்பதற்காகப் பரீட்சையில் யாருமே குறைகூறுவதில்லை. இதுபோன்றதுதான் சமயமும்.

எனினும் அண்மைக்காலமாக சமயவாதிகள் விடுகின்ற தவறுகள், சமயத்திற்கு இழுக்கைத் தருவதாக இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

சமயவாதிகள் அல்லது சமய அமைப்புக்களின் தலைமைத்துவங்கள் விடுகின்ற தவறுகளை வைத்துக்கொண்டு சமயங்களைக் குறைகூறுவோர் மதவாதப் போக்குடையவர்களாகவும், பிற மதங்களை மதிக்கத் தெரியாதவர்களுமாகவே இருப்பார்கள்.

குறிப்பாக தென்னிந்தியாவில் நடைபெறுகின்ற சாக்கடை அரசியல் பரதகண்டத்தில் தோற்றம் பெற்ற பழமைமிகு இந்துசமயத்திற்கு இழுக்கை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

காஞ்சிகாமகோடி பீடத்தின் பீடாதிபதியாக இருக்கின்ற ஜெயேந்திரர் சுவாமிகளைக் கைது செய்த தமிழகப் பொலிஸார் இப்போது காஞ்சி காமகோடி பீடத்தின் இரண்டாவது பீடாதிபதியாக இருக்கின்ற விஜேந்திரரையும் கைதுசெய்துள்ளனர்.

ஜெயேந்திரரைக் கைதுசெய்வதோ அன்றி விஜேந்திரரைக் கைதுசெய்வதிலோ எந்தவித வாதப்பிரதிவாதங்களுக்கும் இடமில்லை.

ஆனால் கைதுகள், விசாரணைகள் என்று கூறி தம்மை பகிரங்கப்படுத்திக்கொள்ளும் தமிழகப் பொலிஸ் அதிகாரிகள் அங்கு தொடரும் கொலைகளைத் தடுத்தார்களா? என்பதே கேள்விக்குரியதாகும்.

சங்கரராமன் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் எனத் தமிழகப் பொலிஸாரினால் கூறப்படும் சுவாமி ஜெயேந்திரர், சுவாமி விஜேந்திரர் மற்றும் கொலைக்குத் திட்டம் தீட்டியவர்கள் என்று பொலிஸாரினால் முன்வைக்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டு துருவித்துருவி விசாரிக்கப்பட்டுள்ள நிலையில்,

காஞ்சி உத்திராஜமட மேலாளர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இப்படுகொலைச் சம்பவமானது தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குற்றவாளிகளை இனங்கண்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்ற அதேவேளையில் மறு புறத்தில் படுகொலைச் சம்பவங்கள் நடப்பதா இருந்தால் அதற்கு இரண்டு காரணங்களே இருக்கமுடியும்.

அதில் ஒன்று உண்மையான குற்றவாளிகள் இன்னமும் இனங்காணப்படவில்லை என்பது, மற்றையது உண்மையான கொலைக்குற்றவாளிகளை மறைப்பதற்காக தமிழகப் பொலிஸாரும், அரசியல் தலைமையும் இணைந்து சமயத்தலைவர்களைச் சிப்பிலியாட்டி இந்து சமயத்தை இழிவுபடுத்தத் தீட்டிய திட்டம்.

இந்த இரண்டு காரணங்களையும் புறந்தள்ளிவிட்டு பிறகாரணங்களைத் தேடுவது புத்திசாலித்தனமன்று.

# நாட்டை மீளவும் கட்டியெழுப்ப அரசுடன் இணைந்து செயற்படுக!

## ரணிலிடம் மல்வத்தை பீட மகாநாயக்கர் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய திப்பட்டுவாவே சிறி சித்தாத்த சுமங்கள தேரர் கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுமங்கள தேரரை நேற்று முன்தினம் காலை சந்தித்த போதே அவர் இந்தக் கருத்தினை முன்வைத்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த ஆலயங்களை புனரமைப்பது தொடர்பாக எதிர்க்கட்சியின் கருத்தினைக் கேட்டறிந்தார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்திற்கு முன்னர் தடைப்பட்டுப்போன சமாதானப் பேச்சுவார்த்தையினை எவ்வாறு மீள ஆரம்பிப்பது என்றும், அனர்த்தத்தின் பின்னர் பேச்சுவார்த்தையின முன்னேற்றம் குறித்து எதிர்க்கட்சியின் நடவடிக்கைகள் எவ்வாறு அமையப் போகின்றது என்பது குறித்தும் தாம் கேட்டறிந்து கொண்டதாக மகாநாயக்க தேரர் தெரிவித்தார். (ற-4)

# மன்னாரில் ஏற்பட்ட நிலவெடிப்பு குறித்து அகழ்வாராய்ச்சி நிலையம் தீவிர கவனம்

(மன்னார்)

மன்னார் முத்தரப்புத் துறையில் வீடுகள் சிலவற்றின் நிலப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெடிப்புத் தொடர்பாக பூகோளம் மறறும் அகழ்வாராய்ச்சி நிலையம் விசேட கவனம் செலுத்தியுளளது.

இது தொடர்பான அறிக்கையை மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் இருந்து தாம் எதிர்பார்ப்பதாக பூகோளம் மற்றும் அகழ்வாராய்ச்சி நலைய அதிகாரி ஜெக்குடி தெரிவித்தார்.

இவ்வாறான நிலவெடிப்புக்கள் பல்வேறு காரணங்களினால ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டென குறிப்பிட்ட அவர், சிறியளவிலான நிலநடுக்கங்களும் இந் நில வெடிப்புகககு காரணம் எனத் தெரிவித்தார்.

இத்தகைய சிறியளவிலான நிலநடுக்கங்கள் குறித்து தமது அலுவலகத்திற்கு அறிவிக்கப்படுவது மிக அரிது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புவியோடுகளில் ஏற்படும் அசைவுகளும் இவ்வாறான நில வெடிப்புகளுக்குக் காரணமாக அமையலாம் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் உரிய பரிசோதனைகள் நடத்தப்படாமல் தீர்க்கமான காரணங்கள் எதனையும் கூறமுடியாது என பூகோள அகழ்வாராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பாக தமக்கு சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் அறிவித்துள்ளதாக முருங்கை பொலிஸார் தெரிவித்தார். (க-9)

## நிவாரணப் பொருட்களுடன் 291 வெளிநாட்டு விமானங்கள்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை தாங்கிய 291 வெளிநாட்டு விமானங்கள் இதுவரை இலங்கைக்கு வந்துள்ளன.

அமெரிக்காவில் இருந்து 40 விமானங்களும் இந்தியாவில் இருந்து 9 விமானங்களும் இதுவரை இலங்கை வந்தடைந்துள்ளன.

இதேவேளை, ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுககான நிவாரணப் பொருட்களை தாங்கிய ஸ்பெய்ன் நாட்டு விமானம் ஒன்று நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்தது.

இந்த விமானத்தின் நிவாரண சேவைக் குழுவொன்றும் வந்துள்ளது. வைத்தியர்கள் ,பொறியியலாளர்கள் உட்பட பலர் இக் குழுவில் அடங்குகின்றனர். (ற-4)

## வடமராட்சி கிழக்கில் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தம் காரணமாக உயிரிழந்தோருக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கும் பணி வடமராட்சி கிழக்கில் துரிதமாக இடம்பெற்று வருகிறது.

இபபகுதி மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு இப்பகுதி பதிவாளர் நேரடியாகச் சென்று மரணச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றார்.

இதுவரை 500 பேருக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் விசேட இடம்பெயர் சேவையில் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-43)

## அழிவடைந்த பாடசாலைகளுக்குரிய தற்காலிக கொட்டில்களை அமைக்க யுனிசெப் நிறுவனம் முன்வருகை

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தம் காரணமாக வடமராட்சி கிழக்கில் பல பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளன. மாமுனை அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை மற்றும் தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதி பாடசாலைகளும் சேதமடைந்துள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்கான தற்காலிக கொட்டில்களை அமைக்க யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது. (ற-43)

## நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை குறைகின்றது

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக சமூக நலன்புரி அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி ஆழிப் பேரலை தாக்கியதன் மூலம் இடம்பெயர்ந்த மக்கள் சுமார் 700ற்கும் மேற்பட்ட நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை 326 ஆகக் குறைந்துள்ளது.இந்த நலன்புரி நிலையங்களில் ஒரு இலட்சத்து 82ஆயிரத்து 572 பேர் தங்கியிருக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலேயே ஆகக்கூடுதலாக 82 நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ற-8)

## அமெ. கடற்படை மருத்துவர்களின் மேலும் ஒரு தொகுதி யாழ்.வரும்

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கவென யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள அமெரிக்க கடற்படை மருத்துவக் குழுவுடன் இணைந்து பணியாற்றவென மேலும் ஒரு தொகுதி அமெரிக்கக் கடற்படை மருத்துவக் குழுவினா விரைவில் குடாநாட்டுக்கு வரவுள்ளனர்.

யாழ். குடாநாட்டுக்கு வருகை தரும் இந்த அமெரிக்க கடற்படை மருத்துவக் குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள தங்கியிருக்கின்ற இடங்களுக்கு நேரடியாக சென்று சிகிச்சை அளிக்கவுள்ளனர். (ற-43)

## விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்துச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் நேற்று முன்தினம் மரணமானார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த விசுவநாதன் சிறிகணேசகுமார்(வயது45) என்ற குடும்பஸ்தரே மரணமானவர் ஆவார். மருதனார்மடச் சந்தியில் ஹயஸ் வானுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார்சைக்கிளில பயணம் செய்த சிறிகணேசகுமார் படுகாயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாழ. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிசசை பயனளிக்காமையால் அவர் மரணமானார். (ச-4,19,5)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

'நான் வாழ்கிறேன்' என்று மனிதன் சொல்கிறான். மரணபயம் தான் அவனை ஓர் அடிமை போல் உயிருடன் ஒட்டிக் கொண்டிருக்கச் செய்கிறது என்பது அவனுக்குத் தெரியாது. 'நான் இன்பம் அனுபவிக்கிறேன்' என்று அவன் சொல்கிறான். இயற்கை அவனை அடிமை கொண்டு விட்டது என்பதை அவன் கனவில் கூட அறிவதில்லை.

சுவாமி விவேகானந்தர்

## நகைக்கடையில் திருட்டு

யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள வி.எம்.கே நகையகம் நேற்று முன்தினமிரவு உடைக்கப்பட்டு 18 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் களவாடப்பட்டுள்ளன. இதேவேளை கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஸ்ரான்லி வீதியிலுள்ள மாருதி வர்த்தக நிலையமும் உடைக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (த-5)

## பணமும் இலவசம்

பொலிகண்டிப் பகுதியில் நேற்று மதியம் இனந்தெரியாத ஒரு குழுவினர் பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் இருந்த அகதிகளுக்கும், வீதியால் சென்றுவந்தவர்களுக்கும் பணத்தை வாரியிறைத்துள்ளனர்.

மேற்படி குழுவினர் 8 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா என பணத்தை அள்ளிவழங்கியுள்ளதுடன், வீடியோப்படமும் பிடித்துள்ளனர். (105)

## நோர்வே...

அமைச்சர்களின் பயணங்களைத் தடுக்கும்முகமாகவே இந்தத் திட்டமிட்ட பயண இழுத்தடிப்பு அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. பல மணிநேரம் இழுத்தடித்து கொழும்பிலிருந்து ஹெலியில் ஏற்றிவரப்பட்ட நோர்வே விசேட குழுவினர் அனுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டுத் தரைவழியாக மிகவும் மெதுவாகவும் சுற்றுப்பாதைகள் மற்றும் நேரத்தை இழுத்தடிக்கும் தூரப்பாதைகள் ஊடாக அழைத்துவரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தலைவர்...

நோர்வே உயர்மட்டக்குழுவில் வெளிவிவகார அமைச்சர் ஜான பீற்றர்சன், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட் ஜே. ஜோன்சன், துணை வெளியுறவு அமைச்சர் விடார் ஹெல்கீசன், சிறப்புத்தூதுவர் எரிக் சொல்கெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ்பிறஸ்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ தேசியத் தலைவரை சந்தித்து கலந்துரையாடிய பின்னர், நோர்வே உயர்மட்டக்குழுவினர் ஆழிப்பேரலையால் அழிவுக்குட்பட்ட பகுதிகளை பார்வையிடவென முல்லைத்தீவுக்குச் சென்றனர். (த)


### சிவா வீடியோ லைபிறறி

பிறந்தநாள், பூப்புனித நீராட்டு, திருமணம் ஏனைய நிகழ்வுகள் அடங்கிய பழைய, புதிய வீடியோ பிரதிகளை (V.H.Sகொப்பி) சிறந்த வீடியோ சீடியாக (V.C.D) மாற்றம் செய்தும், D.V.Dயில் உள்ளவற்றை V.C.Dயாக மாற்றியும் தரப்படும். கொப்பிகளையும், சீடிக்களையும் குறைந்த விலை

சிவா வீடியோ லைபிறறி
இராமலிங்கம் வீதி, முடமாவடி
(பூங்கனிச்சோலை அருகில்) T.P- 222 7152
(C/850)


## மரண அறிவித்தல்

### கந்தர் காசிநாதர்

**(இளைப்பாறிய ஆசிரியரும், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய தர்மகர்த்தாவும்)**

மட்டுவில் வடக்கு ஆயத்தடியைச் சேர்ந்த கந்தர் காசிநாதர் 2005.01.22 சனிக்கிழமை மாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் ஆ.க.வல்லிபுரம்(இளைப்பாறிய ஆசிரியர், உடையார்லேன், பழம்றோட் கந்தர்மடம்) அவர்களின் சகோதரரும், திருமதி கா.சிவகாமிப்பிள்ளை அவர்களின் கணவரும், பாலசுப்பிரமணியம் (**T.R.O** கிளிநொச்சி), சரோசினிதேவி, அமரர் ஈஸ்வரி தேவி (அச்சுவேலி), சிவபாலன் (தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்), சிவகடாட்சம் (கடாபி - சுகந்தி லொறி உரிமையாளர்), சிவஞானசுந்தரம் (திருக்கணித அச்சகம் சாவகச்சேரி), கிருபாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும்,

புஸ்பகாந்தி, தவரத்தினம், மனோன்மணி, விமலினி, அமரர் சண்முகானந்தம் ஆகியோரின் மாமனாரும், அரவிந்தன், அனுஷா, அமுதா, அஜந்தன், திருமதி உமா சத்தியேந்திரன் (யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்), திருமதி சுகிதா - சர்வநாதன் (சுவிஸ்), சுதன், சுறேகா, அபிராமி, ஆரணி, தாரணி, மயூரன், பிரசன்னா, பிரவீணா (ஆங்கிலக் கல்லூரி - ஜெயந்திநகர் கிளிநொச்சி), பிரதீபா பிரபூர்ணா, பிரணவி, குமணன் (பிரான்ஸ்), ஸ்ரீரமணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.01.2005 திங்கள் காலை பத்து மணியளவில் மட்டுவில் முத்துமாரி அம்மன்கோவில் வீதி சிவன் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக வண்ணாத்திப்பால மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு சிவக்கிரியைகளைத் தொடர்ந்து தகனக்கிரியை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**மட்டுவில் வடக்கு,** **தகவல:**
**சாவகச்சேரி** (சி-1030) **கா.சிவபாலன் (மகன்)**

## துயர் பகிர்கின்றோம்

### அமரர் கந்தையா கமலேந்திரம்



**அமரர் கந்தையா கமலேந்திரம் அவர்களின் மறைவால் தாங்கொண்ணாது துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அமரர் கந்தையா கமலேந்திரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

கொக்குவில். (9242) நண்பர்கள்
















## மரண அறிவித்தல்

### கந்தையா கமலேந்திரம்

### (பிள்ளையார்)



ஏழாலையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கமலேந்திரம் அவர்கள் 19-01-2005 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப்புதல்வனும் சுதாசிறியின் அன்புக்கணவரும், தேவரூபன் (Ceylone Shipping Ltd), கோடீஸ்வரன் (அகிலன்-இத்தாலி), யாழினி, பிரதீபன், சினோஜா (மாணவி கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோ.சரிதாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-01-2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீதிராசா வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.** **தகவல்:**
**T.P :- 0777-065368** **சகோதர சகோதரிகள்**
(9241)


## சிறப்புத் தள்ளுபடி விலையில்

**I.D.D லோக்கல் இணைப்புக்களுடன் எப் பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.**




**ஒருவருட உத்தரவாதம் உண்டு**

விலை 13900/= மட்டுமே
I.D.D ரூபா 25/= மட்டுமே

**அழைப்புக்கான வாடகை**
மாதக்கட்டணம்:-150/=
வெளிச் செல்லும் அழைப்பு (பகல்) 1 நிமிடம்: 11/=
வெளிச் செல்லும் அழைப்பு (இரவு) 1 நிமிடம்: 6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் 1 நிமிடம்: 4/=
உள்வரும் அழைப்பு இரவு – இலவசம்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப் பிரதேசத்திற்கும் இயக்கக்கூடிய சேவையென அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயக்குகிறது மொபிடல் இணைப்பு

**சிறிலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணைநிறுவனம்**

**குறிப்பு: டயலொக் மேசைத் தொலைபேசி இணைப்புடன் 12000/= மட்டுமே**

New Branch:
No: 309A, Floor(Opp.union bank)
Galle Road Bambalapitiya
Colombo - 04

# பவர் செலுலர் ரேடிங் கம்பனி

கையடக்கத் தொலைபேசிகள் திருத்தியும், புதிய கையடக்க தொலைபேசிகள் லொக் உடைத்தும் கொடுக்கப்படும்

Office: இல.185 முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
T.P. 212227070, 0712399220, 0777281521


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.